Registered No. M. 878

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion

Science, Art and Civilization

தொகுதி 7 } 1916-ஞு டிசம்பர்மீ
நளஞு மார்கழிமீ { பகுதி 8

அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

## பொருளடக்கம்.

## (CONTENTS)


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ. | 283 |
| | Current events—R. Rangaswamy Iyer. B. A. | 294 |
| 2. | குருநாதரின் ஸ்தூலசரீரம்—அ. ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ., பி. எல், | |
| | Master's Physical Body—A Rangaswami Iyer B. A., B. L. | |
| 3. | பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்) வி. வெங்குசாமி ஐயர் | 304 |
| | Elements of Theosophy—V. Vengusamy Iyer | |
| 4. | இல்லற தருமம்—டி. யம். முகையதீன். | 307 |
| | Dharma of a House-holder—T. M. Mohideen. | |
| 5. | மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் யம். ஏ. | 314 |
| | Meerabai—R. Sreenivasa Aiyer, M. A. | |
| 6. | மெய்ஞ்ஞானப்பால்—வள்ளலூர்பரஞ்சோதியார் | |
| | Divine Wisdom—Vallaloor Paranjothiyar | |
| 7. | செய்ந்நன்றியறிதல்—A. R. ஸ்ரீநிவாஸ முதலியார் | 319 |
| | Gratitude—A. R. Sreenivasa Mudaliar | |
| 8. | புத்தக வரவு (Review of Books) | |
| 9. | சமாசாரம்—News | |


---


## லோக குருவாகிய பரமர் வருவானேன்?

இதுவரை பூர்ணசந்திரோதயத்தில் தமிழில் வெளி வராதது பிரஹ்மக்ஞான சபையாருள் ஸூக்ஷ்ம திருஷ்டி பெற்ற ஒரு வித்தகராகிய ஸ்ரீமான் லெட்பீடரவர்கள், விட்னீ சன்கார்டியா ஹாலில், ஓர் பெரிய ஜனத் திரளுக்குச் செய்த அரியதோர் உபந்யாஸம். ஜகத்குரு வரவேண்டியதற்கு தற்காலம் என்ன அவசியம் நேர்ந்தது என்ற பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதன் விலை அணா ஒன்று தான். தபாற்கூலி பிரத்யேகம் $\frac{1}{2}$ அணா. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு $1\frac{1}{2}$ அணா, ஸ்டாம்பு மூலம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. S. ராமசுப்பையர்.

பிரஹ்மக்ஞான மந்திரம்,

மதுரை.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 7 | 1916-ஞு டிசம்பர்மீ | பகுதி 8
நளஞு கார்த்திகைமீ

## தற்கால நிலைமை.

லண்டன்மாநகரத்துள்ள ஒரு வைத்தியசாலைக்கு ஒரு சிறு பெண்மணி அடியில் கண்டவாறு ஒரு நிருபம் தீட்டியதாக அந்நகரிலிருந்து வெளிவரும் "டைம்ஸ்" என்ற பத்திரிகையிலிருந்து நாம் அறியலானோம்:—

"சிப்பாய்களின் காயங்களில், வேறு ஒரு சரீரத்தினின்று எடுக்கப்பட்ட உயிருள்ள தோலை ஒட்டினால், காயமானது சீக்கிரமாகவும் நன்றாகவும் ஆறும் என்று கேள்விப்படுகிறேன். அது உண்மையா என்று எனக்கு தயவு செய்து சொல்லவேணும். போதுமான மட்டில் உயிருள்ள சருமம் அகப்படாதபடியால் அனேக யுத்த வீரர்களுடைய காயங்கள் நன்றாக ஆறவில்லையென்று கேள்விப்படுகிறேன். அது வாஸ்தவமானால் என்னுடைய சரீரத்தினின்று போதுமான சருமத்தை எடுத்து யுத்த வீரர்களின் காயத்திற்கு கட்டுவதற்கு உபயோகமாகும் பொருட்டு எப்போது என்னை

வரும்படி சொன்னாலும் வரச் சித்தமாயிருக்கிறேன். என்னுடைய சரீரத்தினின்று எவ்வளவு சருமத்தை எடுத்தல் சாத்தியமோ அவ்வளவு சருமத்தையும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன்.

நான் ஏதோ யோசனையின்றி ஒரு உற்சாகப்பட்ட நிமிஷத்தில் இதைச் சொல்லுகிறேன் என்று எண்ணவேண்டாம். தினந்தோறும் அடுத்த கிராமத்திலிருந்து இந்நகரத்திற்கு என் ஜீவனார்த்தம் வரவேண்டியிருக்கிறது. ஆகையால் என்போலிய சிறுமிகள் சிப்பாய்களுக்கு சிகித்சை செய்யுமாறு என்னால் அக்கைங்கரியம் செய்ய முடியவில்லை. என்னுடைய இரண்டு சகோதரர்களும் யுத்தத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களை யுத்தேசித்தாவது நான் யுத்த வீரர்களுக்கு ஏதாவது உதவி செய்யக் கடமைப் பட்டவள் என்று எனக்கு தோன்றுகிறது.

வேறு ஒரு வைத்தியசாலையும் எனக்குத் தெரியாதாகையால் தங்களுக்கு இதை யெழுதலானேன். நான் செய்யக்கூடிய மேற் சொன்ன உதவி தங்களுடைய வைத்திய சாலையில் தேவையில்லையென்றால், தயவு செய்து நான் எவ்விடம் சென்றால் பயன்படும் என்று சொல்லும்படி பிரார்த்திக்கிறேன்.''

* * *

இது கதையல்ல. உண்மையாய் நிகழ்ந்தசங்கதி. கனவிலும் காணுதற்கரிய அற்புதச் செய்கைகள் நனவிலும் சிற்சில சமயங்களில் நடக்கின்றன. அவ்வித ஆச்சரியங்களில் ஈதொன்று. இதைப் போன்ற தேசாபிமானமும் பரோபகார சிந்தையும் காண்பதரிது.

* * *

ரவீந்திர நாத டாகோரின் கவி சாதுர்யத்தையும், பெருமையையும், தேசாபிமானத்தையும், நமது பத்திரிகை

யில் முன்னிரு சஞ்சிகைகளில் வெளிப்போந்த வியாசங் களினின்று நேயர்கள் அறிவார்கள். தாம் பிறந்த நாட்டில் பிறந்த கடையோனையும் சோதரனுப் பாவிக்கும் இம் மஹாநுபாவர் தம்முடையவித்யாசாலைக்குப் பொருளுதவி தேடுவதற்காக வட அமெரிக்கா கண்டத்தில் ஐக்கிய நாடு களில் பிரசங்கங்கள் செய்யப் போயிருக்கின்றார். அப்பொ ழுது அந் நாடுகளுக்கு வடக்கேயுள்ளதும் பிரிடிஷ் குடி யேற்ற நாடுகளில் சிறந்ததுமாகிய கனடாவில் வந்து சில பிர சங்கங்கள் செய்யும்படி பிரார்த்தித்து ஒரு வேண்டுகோள் வந்தது. அதற்கு பின்வருமாறு உத்தரமளித்தார். "இந்தி யர்களை அவமதித்ததும், அவர்கள் உங்கள் மாகாணத்தில் அடி வைக்கக் கூடாது என்று தடுத்ததுமாகிய உங்கள் நாட்டில் நான் அடி வைக்கமாட்டேன்." என்று உறுதி யாய்க் கூறினார். இவரல்லவோ நம் தேசத்தின் உண்மை யான தேசாபிமானி! உலகிற் சிறந்த உத்தம கவியும், ஆசி யாக் கண்டத்து ஆஸ்தான கவி சக்கிரவர்த்தியுமாகிய இம் மஹானுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு இனியாவது இந்தியர்பால் கொண்டிருக்கும் வெறுப்பை கனடா தேசத் தார் ஒழிப்பாராக! இவ்விஷயத்தில் இந்தியர்களுடைய அந்தரங்கமான அபிப்பிராயமானது, இந்தியாவில் பற்பல மாகாணங்களிலும், பற்பல நகரங்களிலும் உள்ள சபை யோர்களால் நம் கவீந்திரராகிய ரவீந்திர நாதருடைய தீர் மானத்தை ஆர்வமுடன் ஆதரித்துக்கொண்ட தீர்மானங்க ளால் நன்கு வெளியாகின்றது.

* * *

சுமார் ஒன்பது வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் ஸர் ராபர்ட் பேடன் பவல் என்ற ஒரு புத்திமானல் வாலி பர்களுக்கு தேசாபிமானமும், ராஜபக்தியும், பரோபகார சிந்தையும், நன்னடத்தையும் எளிதில் உண்டாகும் பொரு. ட்டு ஒரு புதிய ஏற்பாடு செய்யப்பட்டது. "ஸ்கௌட்" என்ற ஆங்கில பதத்திற்கு வேவுகாரன் என்று பொருள்

ஒரு ஸைந்யத்திலிருந்து வெகு சாமர்த்தியசாலியாயும் தீரனாயும் உள்ள ஒருவீரனை முன் வேவு அனுப்பி எதிரிகளின் நிலவரையையும், பலா பலங்களையும் உள் ரகசியங்களையும் அறிந்து வந்து தளகர்த்தரிடம் தெரிவிக்கும்படி அனுப்புவதுண்டு. அவ்வேவுகாரனுக்கு ஆங்கிலத்தில் "ஸ்கௌட்" என்று பெயர். எப்படி ஒரு ஸைந்யமானது தைரியமாய் முன் சென்று வெற்றி பெறுவதற்கு வேவுகாரன் இன்றியமையாதவனோ, அம்மாதிரியே பிரிடிஷ் ராஜயம் உலகெங்கும் பரவுதற்கு காரணஸ்தராயிருந்தவர்கள் ஆங்கிலேயர்களுள் தைரியமும், மனஉறுதியும், விடாமுயற்சியும் தேசாபிமானமும் உள்ள சிலரேயாம். அத்தகையார் ஒரு தேசத்திலுள்ளவரை அத்தேசம் ஓங்கும். எத்தேசத்தில் அன்னவர் கிடையாதோ அத்தேசம் சீர்குலையும் நாள் நெருங்கிவிட்டதென்னலாம். ஆகையால் பால்ய பருவமுதற்கொண்டே சிறுவர்களிடத்து மேற்கூறிய குணங்களை வளரச் செய்வது பெரியோர் கடமை. ஸர்பேடன் பவல் இக்காரணம் கொண்டே வாலிபர்களுடைய சங்கம் ஒன்று ஏற்படுத்தி அதின் அங்கத்தினருக்கு ஸ்கௌட் என்று நாமகரணம் செய்தார். தேசோபகார பரோபகாரங்களுக்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கும் வேவுகாரன் என்று பொருள் படுவதற்காக அப்பெயர் உபயோகிக்கப் பட்டது.

* * *

பெற்றோர்களால் எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட உத்தரவுடன் ஒரு வாலிபன் தன் வயசுள்ள இதர வாலிபர்களுடைய ஜதையைச் சேரவேண்டும். அந்த ஜதைக்கு "பட்ரோல்" என்று பெயர். அதன் தலைவனுடைய உத்தரவைக் கீழ்ப்படிந்து மற்றவர் நடக்கவேண்டும். அவனுக்கு அடுத்தபடி இரண்டாமவன். பல ஜதைகள் அல்லது 'பட்ரோல்'கள் சேர்ந்து ஒரு சேனை அல்லது துருப்பு ஆகும். ஒரு துருப்புக்குத் தலைவர் 'ஸ்கௌட் மாஸ்டர்'. ஒரு பையன் 'ஸ்கௌட்' ஆவதற்குமுன் 'ஸ்கௌட்' விதிகளையும்

* Patrol

சம்ஞைகளையும், வந்தனங்களையும் தெரிந்துகொண்டும் யூனியன் ஜாக் என்ற இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐயர்லாந்து கொடியை பறக்கவிடும் விதத்தையும் தெரிந்துகொண்டும் கயிற்றை ஆறுவிதமாக முடிக்கும் விதங்களையும் அறியவேண்டும். இவைகளை அறிந்தவன் ஸ்கௌட் ஆகவேண்டும் என்ற ஆவலுள்ளவனுகவிருந்தால் முதன் முதல் ஒரு மாதகாலம் வரையாவது 'டேண்டர்புட்*' என்ற பெயருடைய வகுப்பில் சேரவேண்டும். அவன் 2-ஆவது வகுப்பு ஆவதற்குமுன் (1) அபாயத்தில் 'முதலுதவி' 'காயம் கட்டுதல்' இரண்டும் தெரிந்துகொள்ளவேண்டும் (2) அக்ஷரங்களுக்குச் சரியான சம்ஞைகள் தெரியவேண்டும். (3) 24 சிறு சாமான்களை ஒருநிமிஷநேரம் பார்த்து உடனே அவைகளில் 16 சாமான்களாவது இன்னவை என்று ஞாபகத்துடன் சொல்லவேண்டும். அதாவது குறிப்பாய்ப் பார்த்தல் என்ற சக்தியைக் காட்டவேண்டும் (4) 'ஸ்கௌட்' நடையில் 12 நிமிஷத்தில் ஒரு மைல் தூரம் செல்லவேண்டும் அதாவது 20 அடி நடத்தலும் 20 அடி ஓடலுமாக மாறி மாறி நடப்பதுதான் ஸ்கௌட் நடை (5) இரண்டு தீக்குச்சிக்கு மேலுபயோகியாமல் வெளியிடத்தில் நெருப்புண்டாக்குவது (6) வெகு சொற்பமான பாத்திரங்களை வைத்துக்கொண்டு சமையல் செய்தல் (7) ஸேவிங்ஸ் பாங்கியில் 6 அணுவாவது போட்டுவைக்கவேண்டும். (8) 16 திக்குகள் விதிக்குகளை திசைகாட்டும் கருவியில் காட்டவேண்டும். இவைகளை தெரிந்துகொண்ட ஒரு டேண்டர்புட் என்றவன் அடியில் கண்டபடி வாக்குதத்தம் செய்யவேண்டும். அதாவது,

"கடவுள் விஷயமாயும் அரசன் விஷயமாயும் எனக்கு ஏற்பட்டுள்ள கடமையைச் செய்யவும்,

எக்காலத்தும் இதரர்களுக்கு உதவி செய்யவும்,

ஸ்கௌட் விதிப்படி நடக்கவும் என்னால் கூடியவரை முயலுகிறேன் என்று என்னுடைய கௌரவத்தின் ஆணை

* Tender-foot

யின் பேரால் வாக்களிக்கிறேன் என்று வாக்குதானம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அவன் 2-ஆவது வகுப்பு ஸ்கௌட் ஆகிறான். இவன்.

(1) 50 கஜம் தூரம் நீந்தவேண்டும்.

(2) ஸேவிங்ஸ் பாங்கில் 12 அணாவாவது வைத்திருக்கவேண்டும்.

(3) நிமிஷத்துக்குள் 16 வார்த்தையாக ஸம்ஞையில் பேசவேண்டும்,

(4) தனியாகவாவது அல்லது மற்றொரு ஸ்கௌட்டுடனாவது 7 மைலுக்கு அப்பாலுள்ள ஓரிடத்துக்கு நடந்தாவது அல்லது படகிலாவது போய் அப்படியே திரும்பிவரவேண்டும். வந்தபிறகு, போய் வந்த விவரத்தை சுருக்கமாக எழுதவேண்டும். கூடுமானால் போய்வர இரண்டுநாள் செலவழிக்க வேண்டும்.

(5) நெருப்பு, நீரில் முங்கல், முரட்டுத் தனமாய் ஓடும் வண்டி, சாக்கடையிலிருந்து வெளிவரும் துர்வாயு இவை போன்றவைகளால் நேரிட்ட அபாயங்களிலிருந்து காப்பாற்றும் வழியை விவரமாய்ச் சொல்லவேண்டும். காயம் பட்ட ஒருவனுக்கு காயம் கட்டிக் காண்பிக்கவும் நீரில் அமுங்கி மயக்கமானவனை மயக்கம் தெளிய வைக்கவும் வேண்டும்

(6) முன் கூறப்பட்டதைவிட கொஞ்சம் அதிகமாகவும் பல தினுசுகளாகவும் சமையல் செய்யவேண்டும்.

(7) ஸ்தலங்களைக் காட்டிய படங்களை சரியாயறியவும், படம் வரையவும், திசை காட்டும் கருவியின்றி திக்குகளைக் காட்டவும் அறியவேண்டும்.

(8) மரம்வெட்டவும், தச்சு, கொல்லவேலையில் ஏதாவது தானாகச் செய்யவும் தெரிந்து கொள்ளவேண்டும்.

(9) தூரம், விஸ்தீரணம், பருமன், எண்ணிக்கை, உயரம், கனம் இவைகளை கால்பாகம், ஏற்ற தாழ்ச்சிக்கு அதிகமாகாமல் மதிக்கத் தெரியவேண்டும்.

(10) டெண்டர்புட்டேக்கு தெரியவேண்டிய விஷயங்களை ஒருவனுக்கு கற்பித்துப் பரீக்ஷித்துக் காட்டல்.

இவ்விதமாய் மேற்கூறிய சோதனைகளில் தேறினால் 1-வது வகுப்பு ஸ்கௌட் ஆகலாம். முதலாவது வகுப்பு ஸ்கௌட் குறிப்பிட்ட பரீக்ஷைகளில் தேறினால் மேலான அதிகாரங்களையும், கௌரவங்களையும் விருதுகளையும் அடையலாம். ஒரு ஸ்கௌட் உயிரைக் காப்பாற்றுவதிலும் மற்ற ஜனோபகாரங்களிலும் அதிசயச்செயல்களைச் செய்வானாகில் அவைகளுடைய ஸாஹஸத்துக்குத் தக்கவாறு பதக்கம் முதலியன வெகுமதிகளும் அவனுக்கு அளிக்கிறதுண்டு. ஸ்கௌட்கள் அணிவதற்கு குறிப்பிட்ட உடைகள் உண்டு. அவைகளையே தரிக்கவேண்டும்.

* * *

ஸ்கௌட் விதிகள் பின்வருமாறு:—

1. "என் கௌரவத்தின் ஆணைப்படி" என்று எந்த வார்த்தையை ஒரு ஸ்கௌட் சொன்னாலும், அது உண்மையாய்த்தானிருக்கவேண்டும்.

ஸ்கௌட் உத்தியோகஸ்தர் "உன் கௌரவத்தின் ஆணையின் பேரில்" இதை செய்து தீரவேண்டும் என்றால் அவனால் கூடியவரை அதைச் செய்தேதீரவேண்டும். ஒரு ஸ்கௌட் பொய் சொன்னாலும், அல்லது அவன் ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்ற நம்பிக்கையான உத்தரவை மீறினாலும் சரி, அவனுடைய ஸ்கௌட் அடையாளங்களையும் பிடுங்கி, ஸ்கௌட்டாக இருக்க லாயக்கில்லையென்று உத்தரவிடலாம்.

2. ஸ்கௌட்என்பவன் அரசனுக்கும், அரசனுடைய உத்யோகஸ்தருக்கும் தாய் தகப்பன்மாருக்கும், தேசத்

துக்கும், அவனுடைய யஜமானனுக்கும் விசுவாசம் பாராட்டவேண்டியது. எவ்வளவு கஷ்டம் வரினும், அவர்களுக்கு உதவிசெய்து வரவேண்டும்.

3. எவ்வாற்ருனும் மற்றவர்களுக்கு உதவி புரியவேண்டியது. தன்னுடைய சுகம்,சௌகரியம், இவைகளையிழக்கவேண்டி வந்தாலும், பிறருக்கு உதவி செய்யவேண்டும்.

4 ஸ்கௌட் எல்லோருக்கும் மித்திரன். எல்லா ஸ்கௌட்களும் என்ன ஜாதி அந்தஸ்துள்ளவர்களானுலும் ஒருவருக்கொருவர் சகோதரர்களாவார்கள்.

5. ஸ்கௌட் எல்லோரிடத்திலும், அதிலும் முக்கியமாக, ஸ்திரீகள் குழந்தைகள், வயோதிகர்கள், பிணியாளிகள் முதலியவர்களிடத்திலும், மிருதுவாயும் மரியாதையாயும் பேசவேண்டும். எவ்வுதவிக்கும் கைம்மாறு பெறுதல் கூடாது.

6. ஸ்கௌட் பிராணிகளுக்கு மித்திரன். ஒரு ஜந்துவையும் ஹிம்சிக்கக்கூடாது.

7. ஸ்கௌட் உத்தரவுக்கு கீழ்ப்படிவான். தாய் தகப்பன்மார், தலைவன், இவர்கள் உத்தரவை உடனேசெய்தே தீரவேண்டும். அந்த உத்தரவு எவ்வளவு சரியில்லையென்று தோனறினுலும், தனக்கு பிடிக்காததாயிருந்தாலும் அதை செய்துவிட்டு பிறகு வேண்டுமானல், அந்த உத்தரவு கூடாதென்பதற்கு காரணங்கள் உண்டானல் தெரிவிக்கலாம்.

8. என்ன சங்கடங்கள் வந்தபோதிலும், ஸ்கௌட் சிரித்த முகமாய் உத்ஸாகமா யிருக்கவேண்டும். எந்த உத்தரவையும் உத்ஸாகமாய் நிறைவேற்றவேண்டும். முகத்தை தொங்கவிட்டு, முணுமுணுத்துக் கொண்டு செய்யக் கூடாது.

9. ஸ்கௌட் செட்டாய் இருக்கவேண்டும்.

10 மனோவாக்கு காயங்களில் ஸ்கௌட் சுத்தமாயிருத்தல் வேண்டும்.

இங்கிலாந்து, காட்ஸ்லாந்து முதலிய நாடுகளில் நகரங்கள் தோறும் ஸ்கௌட் சங்கங்கள் பல ஏற்பட்டு மிக்க நன்மை புரிந்து வந்திருக்கின்றன. காற்றோட்டமாக வெளியில் சஞ்சாரம் செய்தல், குறித்து நோக்கல், சமயத்துக்கு யுக்தமானபடி சௌகரியங்களை ஏற்படுத்திக்கொள்ளுதல், இன்னும் பலவிதமான நற்குணங்களையும் பழகுவதால் சிறுவர்களுக்கு மிகுந்த நன்மை பயக்கின்றது. இங்கிலாந்திலுள்ள ஸ்கௌட்டுகள் இந்த யுத்தகாலத்தில் கைம்மாறில்லாமல் லக்ஷக்கணக்கான பவுன் விலையுள்ள வேலைகளை சர்க்காருக்காகச் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. தேக ஆரோக்கியமும், மன உறுதியும், உல்லாசமும், ஆபத்தத் தன்மையும், ராஜவிசுவாசமும் தேசபக்தியும் ஜனோபகார சிந்தையும் உண்டாவதற்கும், ஸ்கௌட் ஏற்பாட்டைப் போல அவ்வளவு பிரயோஜனகரமானது வேறு ஒன்றும் கிடையாது. ஒவ்வொரு நிமிஷமும் உபயோகப் படக்கூடிய விஷயங்களை ஸ்கௌட் தானே மன உற்சாகத்துடன் கற்றுக் கொள்ளுகிறான். உபாத்தியாயர் சிரமப்பட்டுப் புகட்ட வேண்டுவதில்லை. ஆகையால் இம்முயற்சியின் நன்மையை யாவரும் புகழுகிறார்கள். மாட்சிமை பொருந்திய சக்கிரவர்த்தியவர்களே இந்த சபைக்கு போஷகராயிருக்கிறார்கள்.

* * *

இந்த ஸ்கௌட் ஏற்பாடானது சிலோன் தீவிலும் இரண்டு வருஷங்களுக்குமுன் முதல் மாணுக்கர்களுக்கு மிகுந்த உதவிபுரிந்து வருகின்றதென்று தெரியவருகிறது. இந்தியாவிலும் இந்தமுயற்சி நடந்தால் மிகவும் சிலாக்கியம் என்பதில் ஐயம் இல்லை. இந்தியாவில் வாலிபர்கள் பெரும்பாலும் படிப்பிலேயே கவனமாய் சரீர சுகத்தை நாடாதவர்களாயும், சரீர அப்பியாச மற்றவர்களாயும், காரியத்தைச் சாதிக்கச் சக்திபற்றவர்களாயும், மனத்திடமற்றவர்களாயும், இருக்கிறதாக எல்லோருக்கும் தெரியும். இவர்கள் தான் முக்கியமாய் 'ஸ்கௌட்' களாக ஏற்பட்டு, மேற்கூறிய துர்க்குணங்களுக்கு மாறான சுகுணங்களையடைய வேண்டும். ஆகையால் தேசாபிமானத்தில் மிகுந்த யாவரும்

இந்தியாவில் இந்நன்முயற்சி ஏற்படவேண்டும் என்று சென்ற சில வாரங்களாக பத்திரிகைகளிலும், உபந்யாசங்களிலும், முறையிடுகிறார்கள். இதற்கு ஏற்ப மதனபள்ளியிலும், மதராஸிலும் புதிதாக ஸ்கௌட்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஜனங்களுடைய மிகுந்த ஆவலை அங்கீகரித்தே மதராஸில் மாட்சிமைதங்கிய கவர்னர் அவர்களுடைய அரண்மனையில் உயர்தர வித்யா இலாகா உத்யோகஸ்தர்களுடைய ஆமோதத்துடன் ஒரு ஸ்கௌட் சபை ஏற்பட்டிருக்கிறதாயும், வெளியாகின்றது. இதனாலேயே இந்த முயற்சியானது நன்முயற்சி யென்று சர்க்காரால் ஆமோதிக்கப் படுகின்றது என்று வெளியாகிறது. இந்திய ஸ்கௌட் ஆனவன் பிரிடிஷ்ராஜ்யத்தில் பக்தியுடன் தீவ்ரமான மாதிருபூமி பக்தியுமுடையவனாக இருத்தல் வேண்டும். ஆகையால் அவனுக்குத் தலைவனாகவும், அத்யக்ஷனாயும் இருப்போன் நிரந்தரமான தேசபக்தி யுடையவனாயிருத்தல் அவசியம். கேவலம் சம்பளத்துக்கு உழைக்கிறவனாகவும், உண்மையாய் அந்நிய தேசத்தில்தான் முக்கியமான அபிமானமுள்ளவனாயுமிருந்தால் இந்த தேசவாலிபர்கள்மனதில் உண்மையான பக்தியை பதியவைத்தல் முடியாது. ஆகையால் நம்வாலிபர்கள் ஏராளமாக ஸ்கௌட் சங்கங்களைச் சேர்ந்து தேசத்துக்கு நன்மையையும், தங்களுக்கும் பெருமையையும் தேடுவார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

* * *

மதராஸிலிருக்கும் சுத்திசபை அக்கிராசனபதி தகூர் கஹன் சந்திரவர்மா அவர்களுக்கு ராஜாராம்முதலி யென்ற வாலிபன் அடியில் கண்டபடி கடிதம் எழுதினான். "நான் சில நாளைக்குமுன் கிறிஸ்து மதத்தைச் சேர்ந்தேன். அது பெரும் தவறு என்று இப்போது உணருகிறேன். நம்முடைய ஸநாதன மதத்தின் அழகையும் பெருமையையும் தாங்கள் சொல்லத் தெரிந்தேன். வைதிக தர்மத்தின் உண்மையை நன்றாய் உணர்ந்தேன். நான் சுத்திசெய்து கொள்ள ஆவலுள்ளவனாயிருக்கிறேன்." இவ்வேண்டுகோளுக்கு இணங்கி நவம்பர்மீ 26வ காலை 9 மணிக்கு ராஜ

ரத்ன முதலியார் குமாரன் ராஜாராம் முதலியென்ற பைய னுக்கு சுத்தி ஸம்ஸ்காரம் நடைபெற்றது. 4 பிராமணர் கள் மந்த்ர பூர்வமாக ஹோமம் செய்ததாகவும், அக்காலத் தில் ஏராளமாக ஜனங்கள் கூடியிருந்ததாகவும் தெரியவரு கிறது. இந்த சமாசாரமானது ஹிந்துக்களனைவரும் சந்தோஷிக்க ஏதுவாகும் என்று எண்ணுகிறோம். அஞ் ஞானத்தாலும், பகட்டாலும், ஏமாறி மாதாந்தரப் பிரவே சம்பண்ணினவனை மறுபடியும் ஹிந்துவாகமுடியாதென்று தாளிட்டுக் கதவடைக்கிறதென்றால் அது யாவருக்கும் விய சனகரமில்லையா? தான் செய்தது தவறு என்று அறிந்த பிறகு பிராயச்சித்தம் செய்து மறுபடி மதத்தில் சேர்ப்ப தே நியாயம் என்று சகலரும் அங்கீகரிப்பார்கள் என்று எண்ணுகிறோம்.

* * *

இவ்வருஷம் டிசம்பர் மீ 28௳ முதல் 31௳ வரை வடக் கில் லக்ஷ்மண புரியில் பிரஹ்மக்ஞான கன்வென்ஷன் நடை பெறுகின்றது. நமது பிரசிடெண்டவர்களும், அருண் டேல் அவர்களும், ஜினராஜதாஸர் அவர்களும் உபந்யாசங் கள் செய்வார்கள். வடக்கே பல சமாஜங்களும், சபை களும் கூடுகின்றன வாகையாலும், காசி முதலிய க்ஷேத்தி ரங்களிருப்பதாலும் நம் பிரஹ்மக்ஞான சபை அங்கத்தி னர் சென்று தீர்த்தாடனம் செய்துவருவார்கள் என்று எண்ணுகிறோம். பரோபகாரமும், தேச கைங்கரியமும், எந்த சமாஜங்களில் பிரஸ்தாபிக்கப் படுகின்றனவோ அந்த சங்கங்கள் தான் தீர்த்தங்கள், அவைகளில் நிரம்பியுள்ள வர்கள் சத்துக்கள். அவர்களை சேவிப்பதே தீர்த்தயாத்தி ரை. இத்துடன் அநாதிகால முதல் பெயர்பெற்ற க்ஷேத் திரங்களை தரிசிக்கும் புண்யத்தையும் அடையலாமாகை யால், அங்கத்தினர் அவசியம் புறப்பட்டுப் போகவேண்டு மென்று கருதுகிறோம்.

**ஆர். ரெங்கஸ்வாமி அய்யர்.**

# குருநாதரின் ஸ்தூல சரீரம். *

ஜகத்குருவானவர் இவ்வுலகில் மனிதர் முன்னிலையில் வெளித்தோன்றுங்காலத்தில் அவருக்கு உதவியாயிருந்து அவரது காரியத்தை நிறைவேற்றுவதற்காக ஜீவன் முக்தி நிலைமையை அடைந்தவர்களும் அதைக் கடந்தவர்களுமாகிய பல மஹரிஷிகள் வெளித்தோன்றுவார்களென்று சொல்லப்படுகிறது. இவர்களில் பெரும்பான்மையோர் அவர்களது தலைவராகிய ஜகத்குருவின் வழியைத் தழுவி, அவர்களது சிஷ்யர்களின் ஸ்தூலதேகங்களை தற்கால உபயோகார்த்தமாகக் கைப்பற்றி அவைகளில் புகுந்து அவ்வுதவியைப் புரிவார்கள். ஆகையால் அவ் வுபயோகத்திற்காக சில ஸ்தூல சரீரங்கள் ஆயத்தமாயிருக்கவேண்டுவது அவசியம். ஆனல் ஜீவன் முக்தர்களாகிய மகரிஷிகளுக்கு அவர்களுக்குச் சொந்தமாகிய ஸ்தூல சரீரங்கள் ஏற்கனவேயிருக்க, அவர்கள் உலகில் தோன்றுவதற்கு நூதன சரீரங்கள் வேண்டுவானேன்? என்று ஒருசந்தேகம் ஏற்படலாம். இவ்விதமாக மேலோர்களாகிய மகரிஷிகள் எதை அவசியமாய் வேண்டுவார்கள்? அப்படி வேண்டுவதற்கு என்ன காரணம்? என்ற இம்மாதிரியான வியப்புற்ற விசாரணையைக் கொள்ளுதல் தவறு. அது ஒழிக்கற்பாலது. ஆனாலும் மேற்சொல்லிய விஷயத்தையும் அதுபோன்ற சில விஷயங்களையும் இந்த இடத்தில் சற்று விவரிப்பது தோஷமன்று, நன்மையைப் பயக்கத் தக்கதே.

ஜீவன் முக்தி நிலையை அடைந்த சில மஹாத்மாக்கள் இவ்வுலகில் நின்று அவர்களைச் சேர்ந்த மானிட வர்க்கத்தில் ஜன்ம மெடுக்கும் ஜீவர்களை உத்தாரணம் செய்வதையே தங்கள் கடமையாக ஸ்வீகரிக்கின்றனர். இவ்விதமான வழியைக் கைக்கொண்ட மகரிஷிகள் அக்கடமையை நன்றாய் நிறைவேற்றுவதற்கு ஸ்தூல தேகங்களோடு கூடியிருத்தல் நலமென்று கருதுகிறார்கள். அவர்களது உபயோகத்

---

* இது ஸ்ரீமான் லெட்பீடரவர்களுடைய வியாசத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு.

துக்கு தகுதியான ஸ்தூலதேகங்கள் ஸாமான்யர் சரீரங்கள்போல இருந்தால் போதாது. அத்தேகங்கள் பூரண சௌக்கியத்துடன் கூடினவைகளாய் இருக்க வேண்டுவது மட்டுமல்ல. அவைகள் அம்மஹரிஷிகளின் ஆத்ம சக்திகளை இப்புவியில் கூடியவரை பரிபூரணமாய்க் காட்டத்தக்கவைகளாக அமைக்கப்பட வேண்டுவது அவசியமாகும். சாதாரண மனிதனுடைய ஸ்தூல தேகமோ அவ்வாறு அமைக்கப்பட்டதல்ல. ஏனென்றால் சாதாரண மனிதனுடைய ஸ்தூல சரீரமானது அவனது பூர்வ ஜன்மாந்தர கர்ம பந்தத்திற்குத் தக்கவாறு அமைக்கப்பட்டு அவ்வித நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டிருக்கின்றது. சாதாரண மனிதனோ விகாஸமுறையில் பக்குவத்தை அடையாதவன். அவனுடைய பல சரீரங்களும் அவனுடைய பூர்வ கர்ம பந்தங்களால் நிர்மாணம் செய்யப்பட்டு அக்கர்மங்களின் பலனை அநுபவித்துத் தொலைப்பதற்கு ஏற்றவையாயிருக்கின்றன. ஆனால் ஜீவன் முக்தர்களோ கர்ம பந்தங்களினின்று முன்னமேயே விடுபட்டவர்கள். அவர்களை நிர்ப்பந்திக்கத் தக்க கருமம் யாதுமில்லாதபடியால் இப்பூலோக பிருதிவியால் அமைக்கப்பட்ட அவர்களது ஸ்தூல தேஹங்கள் அப்பிருதிவியின் இயற்கையான தர்மத்தால் மட்டும் பாதிக்கத்தக்கன. ஆகையால ஜீவன் முக்தரின் ஸ்தூல சரீரமானது அதிக மேலானது.

இவ்விதமான ஸ்தூல சரீரத்தை நிர்மிப்பது சாமான்ய காரியமல்ல. அதை நாம் நன்ருய் அறியவேண்டுவோமாகில் சாதாரண மனிதனுடைய ஸ்தூல சரீரம் எவ்வாறு நிர்மிக்கப்படுகிறது என்பதோடு அதை ஒத்துப் பார்த்தால் நன்கு விளங்கும். ஒரு ஜீவனானவன் ஸ்வர்க்கத்தினின்று மத்திய லோக வழியாய், இப்பூலோகத்தில் ஜன்ம மெடுக்கும் காலத்தில் அவனுக்காக அவனுடைய தாயின் கர்ப்பத்தில் அமைக்கப்படும் சரீரமானது நான்கு மகாராஜர்கள், என்ற கர்ம தேவதைகளின் மனச் சங்கற்பத்தால் உண்டுபண்ணப்

பட்ட ஒரு பூதத்தின் (Elemental) ஆளுகைக்குள்ளிருக்கின்றது. அந்த பூதமானது உலகத்தில் பிறக்கப்போகிற ஜீவனின் ஸ்தூல சரீரத்தை ஜாக்கிரதையுடன் நிர்மாணம் செய்கின்றது. அந்த ஜீவன் உலகத்தில் பிறந்து சாதாரணமாக ஆறு ஏழு பிராயமாகும்வரையில் அந்த ஸ்தூல சரீரத்தை அந்த பூதம் அமைத்துக்கொண்டு வருகின்றது. இந்த ஆறு ஏழு வயது வரும்வரை ஜீவன் அவனுடைய ஸ்தூல சரீரத்தை உபயோகித்துவர சிறுகச் சிறுக முயன்று வருகிறான். அவனுக்கு அச்சரீரமானது சரியான கருவியாக சுலபமாய் உபயோகப் படுகிறதில்லை. சுமாராகத் தான் அவன் காரியத்திற்கு உதவுகின்றது. அந்த வயதை அடையும் வரை அச்சரீரத்தை தன் ஸ்வாதீனமாக்குவதில் அந்த ஜீவன் எடுத்துக்கொள்ளும் முயற்சியும் சொல்பம் என்றே சொல்லத் தகும். அந்த ஜீவனானவன் அந்த ஆறு ஏழு வருஷ காலத்திலும் ஸ்தூல சரீரத்தோடு சம்பந்தித்திருந்த போதிலும், அதை அதிகமாய் கவனிக்கிறதில்லை. அது தன்னுடைய வேலைகளுக்கு ஒத்த பக்குவத்தை அடையும்வரை அதற்குள் பிரவேசியாமல் ஒதுங்கி நிற்கிறான்.

ஜீவன் முக்தர் விஷயத்திலோ மேற்சொல்லிய முறை வழங்குவதில்லை. அவர் சம்பந்தமாக நிகழும் சங்கதி முற்றிலும் வேறு. அவரைக் கட்டுப்படுத்தும் யாதொரு கர்மமும் கிடையாது. அவருடைய பிராணமய கோசத்தை பூர்வ ஜன்ம கருமத்திற்குத் தக்கவாறு நிர்மாணம் செய்வதற்கு ஒரு பூதத்தை கருமதேவர்கள் சிருஷ்டிக்க வேண்டுவதில்லை. அவருடைய ஸ்தூல சரீரத்தை அவர் தாமே தகுதியாய்ச் செய்யவேண்டுமேயல்லாது அவருக்குப் புறம்பாக அதை நிர்ப்பந்தப் படுத்துமேவாரில்லை. அவருடைய ஸ்தூல சரீரத்திற்குக் காரணமாகவிருக்கிற தாய் தந்தையர் மூலமாகவே அவரது சரீரத்திற்கு ஏற்படும் வெளித் தோற்றம் முதலிய குணங்கள் மட்டும் அவர் சரீரத்தை நிர்ப்பந்திக்கத் தக்கனவாகும். பிராரப்த கருமத்தால் விகாரப் படுகிற

தில்லை. முக்தரின் சரீரமானது அவரதுமேலான ஆத்மசக்திகளை வெளிப்படுத்தத் தக்க அதிக நேர்த்தியான சரீரமாகையால், அவ்விதமாக அதை ஏற்படுத்துவதில் அவர் அதிக முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. அம்முயற்சி நிறைவேறுவதற்கு சில வருஷங்களாகின்றன. இவ்விதமாக சிரமத்துடன் கூடியதும் காலதாமசத்தை உண்டுபண்ணுகிறதுமான முயற்சியில் அவர் அடிக்கடி பிரவேசியாமலிருக்கத்தக்கவாறு நடந்துகொள்ளுகிறார். அப்படி பிரவேசியாமல் இருப்பதற்குச் சாதனமாக அவருடைய ஸ்தூல சரீரம் அதிக காலம் நீடித்திருக்கும்படி செய்துகொள்ளுகிறார். சாதாரண ஜனங்களுடைய சரீரங்களோ சீக்கிரம் ஜரையடைந்து மரிக்கின்றன. அதற்கு காரணங்கள் பல. மனிதர்கள் அவர்களுடைய சரீரங்கள் பிறக்கும்போதே துர்ப்பலமாயிருத்தலாலும் வியாதியினாலும், அகஸ்மாத்தாய் நேரும் விபத்துக்களாலும், பல சுகத்தைக் கொடுக்கும் பலவிதமான முறைகளைத் தழுவுதலாலும், இந்திரிய நிக்கிரகமின்மையாலும், மனச்சஞ்சலத்தாலும் தாங்குதற்கரிய வேலைகளாலும் அவர்களது சரீரங்கள் மூப்பை சீக்கிரம் அடைகின்றன. ஜீவன் முக்தர் மனச் சஞ்சலமற்றவர். பூர்ணசௌக்கியத்தைக் கொடுக்கும் முறைகளைத் தழுவியே அவர் ஜீவிக்கின்றார். ஆகையால் நமது ஆயுளைக்காட்டிலும் அவருடைய ஆயுள் பன்மடங்கு நீடிக்கத் தக்கது. ஜீவன் முக்தருடைய ஆயுள் எவ்வளவு காலமிருக்கத் தக்கதென்று குறிப்பாய் நம்மால் சொல்லவொண்ணாது. ஆனால் அவர்களது ஆயுள் 150 வருஷங்களுக்கு மேலிருக்கும்படியாகச் செய்வது அவர்களுக்கு சுலபமென்று நினைக்கிறதற்கு போதுமான காரணமிருக்கின்றது.

இவ்விதமாக உயர்ந்த பிரவர்த்திகளுக்கு யோக்கியமாகச் செய்யப்பட்டிருக்கும் ஸ்தூல சரீரமானது நுண்ணிய உணர்வுள்ளது. அச்சரீரத்தை சௌக்கியமான நிலையில் வைக்கவேண்டுமாகில் அதை நன்றாய்க் கவனித்து பாது

காக்கவேண்டும். உலகத்தில் பரவியிருக்கின்ற பல சஞ்சலங்களுக்கு அவ்வித சரீரத்தை உட்படுத்தினால், அது அச்சலனங்களைத் தாங்க முடியாமல் நசித்துப் போகும். அக்காரணத்தினாலேயே மகாரிஷிகள் மனித சஞ்சாரத்தை விட்டு தனிமையாய் வசிக்கின்றார்கள். நாம் தினந்தோறும் விளையாடித் திரியும் சஞ்சலம் என்ற சுழல் காற்றில் அம்மகரிஷிகள் தங்கள் சரீரங்களை அலையவிடுகிறார்களில்லை. ஜகத்குருவானவர் உலகத்தில் அவதாரம் எடுத்திருக்கும் காலத்தில், உலகத்தோர்களில் பலர் அவரைக் கண்டு ஆச்சரியமடைவார்கள். சிலர் அவரை துவேஷிப்பார்கள். சிலர் தீவிரமான பக்தியுடன் அவரை பூசிப்பார்கள். உலகமெங்கும் உலகத்தோருடைய உணர்வானது அலைபோல் கொந்தளித்து ஆரவாரிக்கும் அக்காலத்தில் ஜகத்குருவோடு அவதரிக்கும் மகரிஷிகள் அவர்களது நிஜ ஸ்தூல சரீரங்களோடு வெளித்தோன்றினால் அச்சரீரங்கள் சீக்கிரமாக ஜரையை அடைவதுமன்றி சஞ்சலத்தினால் சரீர உபத்திரவமும் அதிகரிக்கும் ஆகையால் மகரிஷிகள் அவர்களது சுய ஸ்தூல சரீரங்களைவிட்டு சிஷ்யர்களின் சரீரங்களில் புகுந்து அவைகளை உபயோகப்படுத்திக்கொள்வதினால் முன்கூறிய அசௌகரியங்களை அவர்கள் அடைகிறதில்லை. தவிரவும் எந்த சிஷ்யனுடைய ஸ்தூல சரீரத்தை குருநாதர் இவ்விதமாக உபயோகப்படுத்துகிறாரோ அக்காரணத்தினால் அந்த சிஷ்யனானவன் பெரும்பாக்கியத்தையடைந்து அச்சுகிர்தத்தினால் விகாஸமுறையில் அதிவிரைவாய் மேல் நோக்கிச் செல்லுகின்றான். குருநாதனானவர் அவருக்குத் தேவையான காலங்களில்மட்டும் சிஷ்யனுடைய சரீரத்தை உபயோகத்துப்படுத்துவார். மனிதர்களுக்குமுன் பிரஸங்கம் செய்யும் போதாவது அல்லது அவர்களுக்கு முன்னர் அனுக்கிரகிக்கும் போதாவது அல்லது இவைபோன்ற மற்ற சமயங்களில் அச்சிஷ்யருடைய சரீரத்தைத் தரிப்பார். அவர் அவ்விதம் உபயோகிக்கும் தருணம் நீங்கினவுடன்

அச்சரீரத்தைவிட்டு அவரது சுபசரீரத்தை அடைந்துவழக்கம்போல லோக ஸம்ரக்ஷணார்த்தமான கிரியைகளைச் செய்வர். அவரை அடுத்து ஸூக்ஷ்ம சரீரங்களில் ஸஞ்சரித்துக் கொண்டிருந்த சிஷ்யனே மறுபடியும் தன்னுடைய ஸ்தூல சரீரத்தை ஒப்புக்கொள்ளுவான். ஆகையால் ஜகத்குருவானவர் உலகத்தில் மனிதர்கள்முன் அவதரிக்கும் காலத்தில் மகரிஷிகளும் உலகத்தில் வெளித்தோன்றுவதற்கு ஸாதகமாக அவரவர்களுடைய சிஷ்யர்களின் ஸ்தூல சரீரங்களும் ஆயத்தமாயிருக்கிறபடியால் அம்மகரிஷிகளுக்கு வழக்கமாய் ஏற்பட்டிருக்கும் பிரவிர்த்திகளுக்கு யாதொரு இடையூறுமில்லை.

இவ்விதமாக குருநாதருடைய உபதேசத்திற்காக தன்னுடைய சரீரத்தைக் கொடுக்கத்தக்க பாக்கியத்தையடைந்த சிஷ்யனுடைய நிலைமை எவ்வாறு உயர்வை அடையத்தக்கதென்று நாம் ஒருவாறு மனதில் நிதானித்தாலும் அச்சரீரத்தில் குருநாதரின் பிரவேசத்தால் அதற்கு ஏற்படும் மாறுதலானது எத்தகையது என்பது நம்முடைய மனதிற்கு கோசரமாகத் தக்கதில்லை. அந்த உபயோகத்திற்கு அச்சரீரமானது அர்ப்பணம் செய்யப்பட்டு அச்சரீரத்தில் உண்டாகும் மாறுதலால் சிஷ்யனுக்கு அச்சரீரமானது அதிக உபயோகமுள்ளதாய் விடுகின்றது. அச்சரீரத்தை அவனுடைய குருநாதர் உபயோகப் படுத்தும் காலததில் சிஷ்யனானவன் அவருக்குச் சமீபத்திலிருந்து அவருடைய தேஜஸில் உலாவிநிற்கும் பெரும் பாக்கியம் அவனுக்குக் கிடைக்கின்றது. அவர் அச்சரீரத்தை விட்டு வெளியேறினவுடன் இவன் அதில் பிரவேசிக்கிறான்.

தற்கால நாகரிகத்துடன் கூடிய ஜனஸமூகத்தில் தோன்ற வேண்டுமென்று நினைக்கும் மகரிஷிகள் இவ்விதமாக சிஷ்யர்களின் சரீரங்களில் பிரவேசித்து தோன்றுதல் நலமென்று கருதுகிறார்கள்; புத்தர் என்ற பதவியை அடைவதற்காக கௌதமர் உலகத்தில் அவதரித்த காலத்

தில் இவ்விதமாக வேறு சரீரத்தை ஸ்வீகரித்தார். மைத்திரேய ரிஷியானவர் 2000 வருஷங்களுக்கு முன்னர் பலஸ்தீனா தேசத்தில் கிறிஸ்துவாக அவதரித்த காலத்தில் சிஷ்யனின் சரீரத்தை அவலம்பித்தனர். இவ்விதமாக வழங்கிவரும் முறைக்கு விலக்கு ஒரு சமயத்தில் மட்டும் ஏற்படுவதாக நமக்குத் தெரியவருகின்றது. ஜகத்குரு என்ற ஸ்தானத்தை அடைந்து அநேகமாயிரம் வருஷம் அதை வகித்து, அதற்குப் பிறகு அதைவிட்டு மேலான பதவியை அடையும் காலத்தில் அவருக்குப் பின்னர் அந்த ஸ்தானத்தைஅடையும் மஹரிஷியானவர் அதற்கு அடுத்து உலகத்தோர் முன் ஜகத்குருவாக முதல் முதலில் அவதரிக்கும் காலத்தில் சிறு குழந்தையாக மற்ற ஜீவர்கள் போல் பிறக்கிறார். இவ்விதமாக இப்பொழுது ஜகத்குருவாக விளங்கும் மைத்திரேய மகரிஷியானவர் கௌதம புத்தருக்குப்பின் அந்த ஸ்தானத்தை அடைந்து அத்தோரணையில் முதல்முதல் பாலகிருஷ்ணனாக ஆரியாவர்த்தத்தில் அவதாரம் செய்து உலகத்தில் காண்பதற்கரிதாகிய பக்தியால் பூஜிக்கப்பட்டனர்.

இவ்விதமாக சொற்பகாலம் சிஷ்யனின் சரீரத்தை குருநாதன் ஸ்வீகரிக்கும் விஷயம் வேறு. மேலான ஸ்தானத்தையடைந்த சிஷ்யனானவன் தன் சரீரத்தைத் துறந்த பிறகு வேறொரு ஜீவனால் தயார்க்கப்பட்ட சரீரத்தைஸ்திரமான வாசஸ்தலமாக கைக்கொள்ளுதல் வேறு. நம்முடைய ஸபைஸ்தாபகராகிய பிளவட்ஸ்கி அம்மாள் அவர்கள் அவர்களுடைய சரீரத்தை விட்டு விலகினபிறகு வேறொரு ஜீவனால் துறக்கப்பட்ட சரீரத்தில் உடனே புகுந்து அதை கைக்கொண்டார் என்று நமக்குள் வதந்தியல்லவா? அவருடைய உபயோகத்திற்காகவே யென்று அச்சரீரமானது தயாரிக்கப்பட்டதா என்பதைக் குறித்து எனக்கு யாதொன்றும் தெரியாது. ஆனால் வேறு சிலர்கள் விஷயத்தில் இவ்விதம் முன்னமேயே உத்தேசித்து அச்சரீரங்கள்

தயாரிக்கப் பட்டனவென்று எனக்குத் தெரியும். இவ்விதமாக ஒருவரால் விட்டுவிடப்பட்ட பழையசரீரத்தை நூதனமாய் வேறொரு ஜீவன் தனக்கு யோக்கியமாய்ச் செய்து கொள்வதில் பிரயாசை யுண்டு. எவ்வளவு பிரயாசை எடுத்தபோதிலும் அதை முற்றிலும் தனக்குத் தகுதியான கருவியாய்ச் செய்து கொள்ளுதல் சாத்தியமன்றென்றே சொல்லலாம். மற்ற ஜீவர்கள்போலப்பிறந்து பால்யம் கௌமாரம் முதலிய அவஸ்தைகளில் வருந்தி அதன்பிறகு தனக்குத் தகுதியான சரீரத்தை நிர்மாணம் செய்து கொள்வது சிலாக்கியமா? அல்லது இவ்விதமாக பூர்வீக அவஸ்தைகளில் காலத்தைப்போக்கி வருந்துவதைக் காட்டிலும் மற்றொரு ஜீவனால் தயாரிக்கப்பட்டு விட்டுவிடப்பட்ட சரீரமானது அவ்வளவு தகுதியுள்ளதாய் ஏற்படாதிருப்பினும் மேற்கூறிய கால நஷ்டம், சிரமம் இவைகளை அகற்றக்கருதி அச்சரீரத்தில் பிரவேசித்தல் சிலாக்கியமா? என்ற விஷயத்தை சிஷ்யனுடைய ஜீவாத்மா தனக்குத்தானே தீர்மானம்செய்து கொள்ளல் வேண்டும். இதற்கு உதாரணமாக ஒருவன் தன்னுடைய சரீர அளவுக்கு உடுப்புத் தயாரிக்க வேண்டுமாகில் கடையில் அதற்கு ஏற்ற துணி வாங்கவேண்டும். அத்துணியை தையற்காரனிடம் கொடுத்துத் தன்னுடைய சரீர அளவிற்குத் தக்கவாறு அதைக் கத்தரித்து தைப்பதில் காலதாமஸம் ஏற்படுகின்றது. விலையும் அதிகமாகின்றது. ஆனால் அவ்வுடுப்பு சரீரத்தின் அளவிற் கேற்றதாயிருக்கும். கடையில் தயாராயிருக்கும் அநேக உடுப்புகளைப் பார்த்து அவைகளில் ஒருவன் தன்னுடைய சரீரத்திற்கு ஏற்ற ஒரு உடுப்பை கிரயத்திற்கு வாங்க விரும்பினால் அது விலை சரசமாயிருக்கும். காலதாமஸம் ஏற்படமாட்டாது. ஆனால் அது அவனுடைய சரீர அளவிற்கு பெரும்பான்மை தகுதியாய் இராது. முன்சொன்ன வழியைத் தழுவுவது சரியா? அல்லது பின்சொன்ன வழியைத் தழுவுவது யுக்தமா? என்ற கேள்விக்கு உத்தரம் என்ன

வென்றால் அதிக சிரமம் எடுத்துக்கொண்டு வீணாக காலத்தைக் கழிக்கிற பால்யம் கௌமாரம் முதலிய தசைகளைத் தழுவிய சரீரத்துடன் பிறக்கிறதைக் காட்டிலும் ஏற்கனவே பிறந்து இத்தசைகளைக் கடந்த சரீரமானது பெரும்பான்மை தகுதியானதாக விருக்கின்றதா என்பதைப் பொறுத்து நிற்கின்றது. சாதாரணமாக ஒவ்வொரு சிஷ்யனும் தனனுடைய சரீரத்தை தன்னுடைய குருநாதனுடைய உபயோகத்திற்கு அர்ப்பணம் செய்ய விரும்புவது சகஜம். அவ்விதமாக விரும்பும் சிஷ்யர்களில் தகுதியாயிருக்கும் சரீரம் துர்லபம்.

ஆனால் ஜீவன் முக்தர்கள் மேலுலகங்களில் தானே பெரும்பான்மை அவரவர்களுடைய பிரவிர்த்திகளை நடத்துவதாக தோன்றுகிறது. அப்படியானால் ஸ்தூல சரீரம் வேண்டிய அவசியம் யாது என்று சங்கையுண்டாகலாம். அவர்களுக்கு எவை அவசியம் எவை அவசியமன்று என்னும் விஷயததை நாம் வினவுதல் தகுதியன்று. ஆனால் சில காரணங்கள் நம் யோசனையில் புலப்படுகின்றன. ஜீவன் முக்தர்கள் உலகத்தின் க்ஷேமார்த்தமாக அவர்களது அநுக்கிரஹ ரூபமான சக்திகளை அருவிபோல் உலகில் பரவச் செய்வதில் அவர்களது காலத்தைப்பெரும்பாலும் கழிக்கின்றனர். இவ்வித வேலையானது ஸுவர் மஹர்லோகங்களில் செய்யப்படுகின்றது. ஆனால் சில சமயங்களில் அவர்களுடைய சக்தியை பூலோகத்தின் மேற்பாகங்களில் பாவச் செய்வது அவசியமாயிருக்கும். அப்போது அவர்கள் ஸ்தூல சரீரங்களோடிருந்தால் சாதகமாயிருக்கும். ஜீவன் முக்தி நிலைமையை யடைந்த சில குருநாதர்கள் சிஷ்யர்களோடு இவ்வுலகில் கூடியிருப்பதை நாம் கண்டிருக்கின்றோம். அதற்காக அவர்கள் ஸ்தூல சரீரங்களோடு இருத்தல் அவசியமாகும். ஆனால் இவ்விதமாக விஷயங்களை விசாரித்தல் எங்களுக்கு வழக்கமன்று. எங்களுடைய குருநாதரின் ஆக்ஞையை தலைமேற்கொண்டு நிறைவேற்றுவது எங்கள் கடமை.

அவர் என்ன காரணம்பற்றி ஸ்தூல சரீரத்தை வகித்திருக்கின்றனர் என்பதைக் குறித்து விசாரித்தல் எங்கள் வேலையல்ல.

அவர்களுடைய ஆக்ஞையை நிறைவேற்றுவதால் எங்களுக்கு ஞானம் அபிவிருத்தி அடைகிறது. அவர்களுடைய எண்ணங்களையும் உள் நோக்கங்களையும் அறிய விரும்புகின்ற ஆச்சரிய புத்தியைக் காட்டிலும் உலகத்தில் உள்ளோர்களுக்கு உதவி புரிவதும் குருநாதருடைய கிங்கரர்களாயிருந்து அவருடைய உத்தேசத்தை நிறைவேற்றுதுவமே ஞானத்தை புகட்டும் வழியாம்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

---

## நன்மொழி.

---

நின்மலமேனி நிமலன் பிறப்பிலி
யென்னுளம் வந்திவ னென்னடி யானென்று,
பொன்வளர் மேனி புகழ்கின்ற வானவன்
நின்மல மாகென்று நீக்கவல் லானே.

துறந்துபுக் கொள்ளொளி சோதியைக் கண்டு
பறந்த தென் னுள்ளம் பணிந்து கிடந்தே
மறந்தறி யாவென்னை வானவர் கோனு
மிறந்து பிறவாம லீங்குவைத் தானே

மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னு மெய்தோற்றத்
தவ்வாய வந்த கரண மகிலமு
மெவ்வாயு யிரு மிறையாட்ட வாடலாத்
தவ்வாயி லாநிறை மெயங்குமெய்கண்டதே.

—திருமந்திரம்.

# பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்.)

## 13-ஆம் அத்தியாயம்.

### மந்திர வித்தை:—(தொடர்ச்சி.)

ஆசுர மந்திரவாதி சுயநயம் பேணுகிறவன். அவன் தனக்கநுகூலமாயும் பிறருக்கு விரோதமாயும் வேலை செய்கிறான். அதினால் விகாசமுறைக் கிடையூறாயிருக்கிறான்.

தைவீக மந்திரவாதி சுயநயம் பேணாதவனாகவும் அன்புள்ளவனாகவும் பிறருக்காக வேலை செய்கிறவனாகவும், அதனால் விகாசமுறைக் கநுகூலமுள்ளவனாகவு மிருக்கிறான். மேற்சொன்ன இருவித மந்திரவாதிகளும் ஒரு நல்ல காரியத்தைச் செய்வதாக வைத்துக்கொள்வோம். அக்காரியம் வெளிப் பார்வைக்கு நல்லதாயிருந்தாலும், செய்கிறவனுடைய நோக்கத்துக்குத் தக்கபடி ஒருவருடைய காரியம் நன்மையாகவும் மற்றவருடைய காரியம் தீமையாகவும் முடிகிறது. ஏனென்றால், மந்திர வித்தையில் என்ன நோக்கத்தின்மேல் ஒரு செய்கை செய்யப்படுகிறதோ அதை யனுசரித்து நன்மை தீமை யேற்படுகிறது.

உதாரணமாக:-ஒரு தைவீக மந்திரவாதியும் ஆசுர மந்திரவாதி ஒருவனும் ஒரு பையனுடைய உயிரைக் காப்பாற்றுகிறார்களென்று வைத்துக்கொள்வோம். ஆசுர மந்திரவாதி அந்தப் பையனுடைய உயிரைக் காப்பாற்றினால் தன்னுடைய சுயநய உபாயங்களுக்கு ஒத்தாசையாயிருப்பானென்ற நோக்கத்துடன் செய்கிறான். தைவீக மந்திரவாதியோ சகல ஜீவராசிகளிடத்திலும் அன்பு பாரட்டுகிற சுபாவமுள்ளவனாயிருப்பதால் அந்தப் பையன் தனக்கு விரோதியாயிருந்தாலும் அவனைக் காப்பாற்றுகிறான். இருவகை மந்திரவாதிகளும் மேற்சொன்னபடி நல்ல காரியம் செய்திருப்பதினால், அவர்களுக்கு அகஸ்மாத்தான மரணம் நேரிடாமலிருக்கும்படியான கர்மத்தை சம்பாதித்துக் கொண்டார்கள். ஆனால் ஆசுர மந்திரவாதி தன்னுடைய கெட்ட எண்

ணத்தினால் தன் குணத்தைக் கெடுத்துக் கொண்டான். தைவீக மந்திரவாதியோ தன்னுடைய நல்ல எண்ணத்தினால் தன் குணத்தை மேன்மைப் படுத்திக் கொண்டான். அப்படியிருந்தும் இருவருடைய செய்கையும் ஓரே விதமானது. அதாவது வெளித்தோற்றத்துக்கு நன்மையானது. இரண்டுக்குமுள்ள வித்தியாசம் நோக்கத்தை யனுசரித்திருக்கிறது. அதாவது குணத்தில் வித்தியாசம். குணம் தான் நூதன கர்மங்களை அடிக்கடி உண்டு பண்ணுகின்றது.

ஆசுர மந்திர வித்தையின் மார்க்கம் சுயநயம் பேணும் மார்க்கமாம். ஆரம்ப தசையில் அது மிகவும் விசாலமான மார்க்கம். அம்மார்க்கம் அப்படியிருக்க வேண்டியதுதான். ஏனெனில் ஒவ்வொருவரும் ஆரம்பத்தில் அம்மார்க்கத்தில் நடக்க முயலுகிறார்கள். ஒவ்வொருவரும் அந்த மார்க்கத்தில் அனேகவித சொத்துக்களைச் சுமந்துகொண்டு போவதினால், இடம் விஸ்தாரமாயிருக்க வேண்டியது அவசியம். இவனுக்கு அம்மார்க்கத்தில் வேறொருவன் இடையூறாயிருந்தால் அவன்மேல் கோபம் கொள்வான். அவனைத் திட்டுவான். இத்தசையிலுள்ள ஜனங்கள் எப்போதும் சச்சரவு செய்துகொண்டிருப்பார்கள்.

இம்மார்க்கத்தில் நடப்பவர்கள் பிறருக் குதவி புரிய சாவகாச மில்லாதவர்களாயிருப்பார்கள். இம்மார்க்கத்தில் ஒருவன் மேலே செல்லச் செல்ல பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற இச்சையும் அவனுக்குக் குறைந்துகொண்டு வரும். ஏனெனில் அவனுடைய மார்க்கம் போகப் போக அதிக கரடு முரடாகவும் அதிக இருட்டாகவும் வளரும். இவனுடன் அம்மார்க்கத்திற் செல்லும் தோழர்களோ விசுவாச மில்லாதவர்களாகவும் குரூரமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். இவைகளை யெல்லாம் அநுபவித்துக் கடைசியில் பொறுக்க முடியாமல் திரும்புவான். இது சகஜமான விதி.

கொஞ்ச காலம் வரையில் இவ்விதம் திரும்பினவனுக்கும் அந்த மார்க்கத்திற் போகிற மற்றவர்களுக்கும் ஒரு விஷயத்தில் மட்டும் வித்தியாசமிருக்கும். அதாவது இவன் முகம் நேரான திசையை நோக்கியிருக்கும். இவன் வைக்கிற ஒவ்வொரு அடியும் இவனுக்குத் தெரியாமலே தைவீக மார்க்கத்துக்குச் சமீபத்திற் கொண்டுபோய் விடும்.

மற்றவர்களைப் போலவே இவன் இன்னமும் சுயநயம் பேணுகிறவனுயிருப்பான். இன்னமும் தன் சொத்துக்களிற் பற்றுதலுள்ளவனுகவே யிருப்பான். ஆனால் இவ்வாசையானது முன்போல அவ்வளவு தீவ்ரமுள்ளதாயிராது. ஏனெனில் இவன் இப்போது தன்னெதிரில் வருகிற கூட்டங்களின் ஊடே தள்ளிக்கொண்டு போகவேண்டியவனுயிருக்கிறான். அந்தக் கூட்டத்தார்கள் போகிற மார்க்கத்துக்கு இடஞ்சலாக இவன் எதிர்கொண்டு வருவதினாலே அவர்கள் இவனைப் பகைக்கிறார்கள். வர வர இவன் அதிகக் களைப்பினால் ஒவ்வொரு பொருளாகக் கீழே போட்டு விடுகிறான் அப்பால் எல்லாப் பொருளும் போய்விட்ட பிற்பாடு, இனிமேல் நிச்சயமாய் இறந்துபோக வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கும்போது தூரத்திலுள்ள தைவீக மார்க்கத்தில் பிரகாசிக்கிற வெளிச்சத்தைப் பார்த்து ஆச்சரியப்படுகிறான். அந்த வெளிச்சம் மகா காந்தியுள்ளதாயும் கவர்ச்சியுள்ளதாயும் இருப்பதினாலே அதில் அதிக கவனம் வைத்து மெல்லமெல்ல அதற்கு சமீபத்திற் செல்லுகிறான். எப்போது இவன் திரும்ப ஆரம்பித்தானே, அந்தக் காலம் முதல் இரண்டு மார்க்கங்களும் கூடுகிற இடத்தை நோக்கி பிரயாணம் போவதாக அறிகிறான். அவ்விரு மார்க்கங்களும் ஆரம்பத்தில் ஒன்றுக்கொன்று சமீபமாகவும் இணையாகவும் போவதினாலும் இவன் இப்போது தைவீக மார்க்கத்துக்கு வெகு சமீபத்தில் வந்திருப்பதினாலும் கொஞ்ச முயற்சியினால் ஒரு மார்க்கத்திலிருந்து மற்றொன்றுக்குத் தாவி விடலாம்.

வி. வெங்குசாமி ஐயர்.

339

# இல்லற தருமம்.

## இல்லறத்தின் இன்றியமையாமை.

கடவுளாற் சிருட்டிக்கப்பட்ட இவ்வுலகின்கண் வாழும் ஜீவராசிகளனைத்தினும் தலைமை பெற்று விளங்கும் மாண்புடையோர் மானிடரே. இவரால் அடையவேண்டிய பயன்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்குமாம். இந் நாற்பயனை வடமொழியார் தர்மார்த்தகாம மோக்ஷமென்பர். இங்ஙனம் இவ்விருமொழியாளரும் நாற்பயன்கள் இன்னவென வெடுத்துக்கூறும் சந்தர்ப்பம் நேருந்தோறும் முதலாவது தருமமும், இரண்டாவது அர்த்தமும், மூன்றாவதாகக்காமமும், இறுதியில் மோக்ஷமுமாகவே வைத்து முறைப்படுத்திக் கூறுவதையுற்று நோக்குங்கால் அவ்வாறு கூறுவதில் ஏதோ ஓர் விசேஷத் தன்மையுண்டென்பது புலனும்.

அஃதாவது பொருளைத்தேடும்போதே அறத்தாற்றேட வேண்டுமென்பார். அறத்தைப் பொருளின் முன்னரும், இவ்வுலக வாழ்க்கைக்கின்றியமையாதது பொருளாதலால் அதனை இன்பத்தின் முன்னரும், இல்லறத்தை வழுவற நடாத்திய வொருவனே மோக்ஷ சாதனங்களில் முயலுதற் கேற்றவனாகின்றானாதலின் இன்பத்தை மோக்ஷத்தின் முன்னரும், இவ்வின்பத்தை யனுபவித்து இஃது இத்தன்மையதெனவறிந்து அதன்கண் விருப்பொழிந்து விரக்தியடைந்த வொருவனாலேயே யடைதற்பாலதாதலின் மோக்ஷத்தை அதன் பின்னருமாக முறைப் படுத்திக் கூறினார் என்பது.

ஆகவே நாம் அடைய வேண்டிய நாற்பயன்களுள் இன்பத்திற்குக் காரணமாகிய இல்லற வொழுக்கமு மொன்றாய் முடிகிறது. இதுவே அகப்பொருளெனவும் படும். அகப்பொருளாவது ஒத்த அன்பினராகிய தலைவனும் தலை

வியும் உள்ளத் துணர்வால் அனுபவிக்கும் இன்பம். நாற் பயன்களை முறைப்படுத்திக் கூறிய "அறம் பொருளின்பம் வீடு" என்னும் வாக்கியமே இல்லறம் இன்றிமையாத தென் பதை வலியுறுத்துகின்றதன்றோ! இன்னும் பிர்ம்மச்சர்யம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பவற்றுள்ளும் பிரம்மச்சர்யத்திற் கடுத்ததாகக் கிருஹஸ்தத்தை வைத்துக் கூறியிருப்பதும் இதன் இன்றியமையாமைக்குப் போதிய சான்றாகும். இன்னும் அறம் இருவகைப் படுமெனவும் அவையிவை யெனவும் கூறப் புகுவானொருவன் இல்லறத்தை முதலிலும் துறவறத்தைப் பின்னருமாக வைத்து "இல்லறம் துறவறம் என அறம் இருவகைப்படும்" எனக்கூறுவதும் காண்க. இதுகாறும் இல்லறத்தினின்றியமையாமையைப் பற்றிக் கூறினேன். இனி இவ்வில்லறம் நடைபெறுதற் கேதுவாகத் தம் மக்களை மணவினையுட்புகுத்தும் பெற்றோ ரறியவேண்டிய முக்கிய விஷயங்கள் சிலவற்றை ஈண்டுக் கூறுவேன்.

## மணவினையிற் பெற்றோர் கடமை.

**மணத்திற்குக் கடன் கோடல்:**—உலகம் பலவிதமென்பதற்கிணங்க இவ்வுலகில் செல்வரும் அவர்க்கு மாறாக வறியரும் நிறைந்திருப்பதுண்மையே. வறியரிற் பலர் தம்மைப் போஷித்துப் பாதுகாப்பதற்குப் போதுமான வருவாயுமின்றி வருந்துகின்றனர். இவர் தம் புத்திரரின் மணக் கோலக்காட்சியை விரைவிற்றாம் காணவேண்டு மென்னு மவாவாலோ அல்லது வேறெதனாலோ தாமுள்ள வறியநிலையையும் ஆராயாது பிறர் மாட்டுத் தனிசு பெற்றாயினும் அம்மணவினையை நிறைவேற்றத் தொடங்குகின்றனர். அன்றியின்னும் பல்லோர் தாம் முன்பே பிறர்க்கு கடன் பட்டிருக்கவும் தம் புத்திரர் விவாஹத்தின் பொருட்டு மேலும் அயலாரிடமிருந்து கடன் பெறவிரும்புகின்றனர். அந்தோ! இக்கடன்களை யெல்லாம் தீர்ப்பவர் யாவரோ? புத்

திரான்றே கடமைப் பட்டுள்ளார்! மக்கள் சுகத்தைக் கருதி மன்றல் புரிவிக்கக் கருதிய தாய் தந்தையர் அவர்கட்கு இவ்விதத் துன்பத்தையும் மனக் கலக்கத்தையு மன்றே கொடுப்பவராகின்றனர்! இராவணன் ஓரமயத்துத் தான் கலங்கிய மனக்கலக்கத்தைக் "கடன் கொண்டார் நெஞ்சம்போலக் கலங்கின னிலங்கை வேந்தன்" எனக் கடன் பெற்றோர் நெஞ்சத்திற்கான்றோருவமித்தாராயின் மற்றும் இக்கடன் கோடலால் ஒருவற்குறும் மனத்துக்கத்தை யிவ்வளவினதென வரையறுத்துக் கூறவும் வேண்டுமோ? ஆதலின் பெற்றோராவார் தம்மிடமுள்ள பொருளைக் கொண்டேயாயினும் பொருளில்லையாயிற் சிறிதுகாலம் தாமஸம் செய்து பொருள்தேடும் முயற்சியி லிருந்துகொண்டு "பலதுளி பெருவெள்ளம்" என்றபடி போதுமான பொருள் சிறிதுசிறிதாகச் சேர்ந்த பின்னராயினும் தம்மக்கட்கு மன்றல் முடிப்பான் றொடங்குதல் அல்லது கருதுதல் மாண்பாகும்.

**மணப்பருவம்:**—முற்காலத்தில் படிக்கின்ற சிறுவர்கள் எப்போதும் பிரம்மச்சர்ய விரதத்தைக் கைக்கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு மாணாக்கனும் படிப்பு முடியும்வரை விவாகமில்லாத நோன்பையே கைக்கொண் டொழுகக்கடவன். கிருஹஸ்தனாகு முன்னமே முற்காலத்தில் அவன் போர்வீரனாவான். அந்த ஆதிஉயர்வான ஆசாரனை இக்காலத்தில் என்னவிதமாக ஆயிற்று. இக்காலத்திய பாடசாலைகளிற் கற்கும் மாணாக்கர்கள் குழந்தைகளைப் பெற்றிருக்கிறார்கள். கலாசாலை புகுமுன்னமேயே மாணாக்கர்கள் மகப்பேறு பெற்றிருக்கிறார்கள். இதனால் அவர்களே குழந்தைகள். அவர்களுக்குக் குழந்தைகள் உண்டாயிருப்பதைப் பார்க்க எவ்வளவு வியப்பைத் தருகின்றது! இதனால் விளையும்பயன் யாதெனில் கலாசாலைப்படிப்பு முடியப்பூர்ணசக்தியும் வீரியமுமுள்ளவராக இருக்கவேண்டிய மாணாக்கர்,

சரீரபலங் குன்றி நாடிநரம்புகள் தளர்ந்து மூளை நைந்து போய் நடைப்பிணம்போ லாகின்றனர். அநேகருக்குத் தங்கள் புத்திருக்குத் தகுந்த பருவம் வாராதபோதே மணம் முடிக்கவேண்டிய சந்தர்ப்பங்களும் நேர்வதியற்கையே. ஆயினும் இவ்விஷபத்தில் பெற்றோராவர் தம்மாலியன்றமட்டும் முன்னாலோசனை புரிந்து உரிய பருவத்தில் மணவினையை முடிப்பதற்கு முயலுதல் மிகவுத்தமம்.

குடும்பப் பொறுப்பு:—விவாஹத்தைப் புத்திரர் கட்கு நிறைவேற்றின மாத்திரத்திலேயே தம் குடும்பப் பொறுப்பு முழுவதையும் அவர் தலைமேற் சுமத்தி விடுவதும் அல்லது தம்மினின்றும் அம்மணமக்க ளிருவரையும் வேறுபிரித்து வைத்துவிடுவதும் பலருட் சாதாரணவழக்காயிருக்கின்றது. இங்ஙனம் செய்வதில் ஒருவன் தன் புத்திரன் குடும்பப் பாரத்தைத் தாங்குதற்கும் தன்னையும் தன் குடும்பத்திலுள்ள யாவரையும் ஆதரித்துப் பாதுகாக்கவும் வல்லவனென்றும் வருவாய்க்கேற்ற பொருளழிவு செய்வோனென்றும் இது சம்பந்தமாக இன்னும் ஆராய்தற் கின்றியமையாதவற்றையெல்லாம் முன்னரே ஆய்ந்து தெளிந்து செய்தலுத்தமம். இவ்வாறாராயாமல் சிலர் தம். புத்திரர்களிடத்திலேயே குடும்பப்பாரம் முழுவதையும் ஒப்புவிப்பதினால் தாம் நினைத்தவாறு பொருள்களைச் செலவிட்டு இல்லறம் நடாத்தும் மார்க்கமு மின்னதெனவறியாராய்த் தம்மையும் தம் நிலையினின்றும் கெடுத்து தமது பெற்றோராதிய மற்றோரையும் ஆதரித்துப் போஷிக்க வன்மையற்று விரைவில் வறியராகி வாளாவானத்தை நோக்குகின்றனர். ஆகலால் இது விஷயமாகப் பெற்றோர் பெரிதும் முன் ஜாக்கிரதையாக விருந்து கொள்ளலத்யாவசியம். இனிப் பெண்கொள்ளலைப்பற்றிச் சிறிதாராய்வோம்.

மணமகள் கோடல்:—இதில் புத்திரன் மனதைத் தந்தை முன் பறியவேண்டும். தான் ஓர் பெண்ணைத் தன்

மனதினுட் கொண்டாயினும் தாய் தந்தையராற் கருதப் பட்ட பெண்மேல் மனவிருப்பின்றியேனு மிருக்கலாம். இங்ஙனம் பெற்றோர் புத்திரன் இவர்கட்கு இவ்வெண்ண வேறுபாடுகள் நிகழ்ந்து கொண்டிருக்க முடிவில் தந்தை முற்றுணிந்து தன் புத்திரற்கு வெறுப்புள்ளாளாயும் தனக்கு விருப்புற்றாளாயுமுள்ள வொருத்தியைக் குறித்து "நீ இவளை வேட்பாயாக" எனப் புத்திரனை நோக்கித் தந்தையோ தாயோ வுரைப்பாராயின் "தந்தை சொன் மிக்க மந்திர மில்லை" "தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" எனும் கொள்கைகளை யுடையான் புத்திரனாகலின் தனக்கு முன்னறி தெய்வங்களாகிய தாய்தந்தைய ருரைத்த அவ்வுரையை மாறாதிணங்குவான். பின் நாணிட்டு நான்குநாளாவதன் முன்னரே மணமகன் தன் காதலியினிடத்து முன்னர்க்கொண்ட வெறுப்பின் பயனாக அவ்விருவர்க்குள்ளும் ஒற்றுமையின்மையும் சச்சரவும் விண்டவன்பும் பற்றுள்ள வேறுபாடுகளும் விளைந்துகொண் டிருப்பதை நாம் கண்கூடாக் காண்கின்றோமன்றோ.

ஆதலின் இவைபோல்வனவற்றிற்கெல்லாம் இடந்தராமல் முன்னரே புத்திரனது உள்ளக்கருத்தையும் உணர்ந்து கொள்வதன்றி எப்பெண்ணைத் தன் மகற் குரியவளாகக் கருதுகிறானோ, அப்பெண்ணின் குலச் சிறப்பு நடைச் சிறப்பு கல்விச் சிறப்புக்களோடு அன்னாள் தன் மகனுக்கு வாழ்க்கைப்பட மனநிறைந்த வேட்கையுடையளா வென்பதையும் தெரிந்து அதனைப்பின் தன் புத்திரன் கருத்தோடிசைத்துப்பார்த்து இருவரெண்ணங்களும் ஒன்றையொன்றவாவுவனவாகக் காணப்பட்ட பின்னரே இவற் கிப்பெண் தக்கவளென முடிவுசெய்தல் சால்புடைத்து.

ஈங்கு நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய மற்றோர் விஷயமுமுளது.

மணமகன் மணமகள் ஆகிய இருவரின் தாய்தந்தைய ருக்கும் தமது புத்ரன் புத்ரிகளினது விவாஹவிஷயத்தைப் பற்றிய சிந்தனை யில்லா திருக்கும்பொழுதே ஒத்த குலத்தின ராய் ஒத்த இனத்தினராய் ஏற்ற கல்வியினராய் ஏற்ற பருவத் தினராயுள்ள ஓர் தலைமகனும் தலைமகளும் தாமாகவே ஒரு வரை யொருவர் விரும்பி வேட்டலின் வேட்கை கொண் டனராயின் அக்குறியறிந்து அப்பெண்ணைத் தான் விரும் பிய புருடனிடத்திலேயே மனைவியாகச் சேர்ப்பதற்குப் பெண்ணின் பெற்றோரும் அவ்வாடவனைத் தான் விரும்பிய பெண்ணிற்கே நாயகனுக்குதற்கு அவனது பெற்றோரும் தகுந்த முயற்சியைத் தளர்விலாது செய்யவேண்டும்.

அவ்வண்ணம் செய்யாது அப்பெண்ணை வற்புறுத்தித் தாங்கள் விரும்பிய மற்றோர் தலைமகற்குக் கொடுப்பரேல் அப்பெண் தாய்தந்தையர் முதலிய பெரியோர் வார்த்தை கட்குடன்பட்டு அத்தலைமகனை வேட்டற் கிணங்குவாளா யினும் பின்னர்த் தனக்கும் தன் கணவற்கு மிடையில் ஒரு சிறிதும் ஒற்றுமையிராது. ஆதலிற் பெற்றோர்கள் அவர் கள் விருப்பப்படி நிறைவேற்றலே பெரிது நன்று.

இதுகாறும் மணவினையில் பெற்றோர் கடமைகளைப் பற்றிக் கூறிவந்தேன். இனி அம்மணமக்கள் செய்யவேண் டிய கடமைகளைப்பற்றி "இல்வாழ்க்கை" யென்னும் தலைப் பெயரிட்டுக் கூறுவேன்.

## இல் வாழ்க்கை

பெற்றோர் செய்யவேண்டிய கடமைகள் இவ்வாறாக, மற்று, மணமக்கள் தாங்கள் இல்லறம் நடாத்து முறையில்

"காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதிலொரு கருமஞ் செய்பவே"

என்ற முதியார் வாக்கின்படி எதைச்செய்யினும் இருவரும் ஒற்றுமைப்பட்ட எண்ணமும் மனமு முடையவராகவே செய்துமுடித்தல் வேண்டும் என்பதும் தவிர நாயகியானவள் நாயகற்கு மாறுபட்ட எண்ண முடையவளாகி,

"இருந்தங் கிதம்பேசி ஈரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப—வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தாற்
சாடினாளோடோடத் தான்" எனவும்
"பேய்கொண்டாலும் கொள்ளலாம் பெண்
கொள்ளலாகாதே"

எனவும் ஆன்றோராற் பாடப்படுதற் கிலக்காகத் தன்னைச் செய்துகொள்ளா தொழுகவும் வேண்டுமென்பதும் முக்கியம். இவ்வாறு நாயகியோ டெல்லாவற்றிலுமிசைந் தொழுகுதல் நாயகி கல்வியறிவுடையளா யிருந்தாலன்றி யியலாது. கற்றறிவில்லாக் காரிகை பொருத்தியைக் கைக்கொண்டா னொருவன் நாளடைவில் தான் கையாண்டு வரும் கணக்கில்லாத துன்பங்களையாமின்றும் கண்ணாரக் காண்கின்றோமன்றோ? ஆதலிற் பெண்கள் கல்விகற்கவேண்டுமென்பதும் அவசியமாயிற்று.

"எம்மை யுலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மரறுக்கும் மருந்து"

என்று ஆன்றோராற் சிறப்பித்துச் சொல்லப்பட்ட இத்தகைய கல்வியைப் பெற்ற ஓர் பெண்ணை மணந்தவன் எவ்வளவு எளிதாகத் தன் இல்லற தருமங்களை எட்டுணையும் வழுவா தியற்றுதற் கேற்றவனாகின்றான். பெண்கள் கற்றல் கூடாதெனப் பிதற்றுவோர் பலருக்கும் அடுத்த மாதம் வெளிவரும் இப்பூர்ணசந்திரோதய மென்னு பத்திரிகை வாயிலாகவே பெண்கல்வியின் இன்றியமையாமையைப் பற்றித் தெரிவிக்கின்றேன்.

தி. யம். மொகையதீன்,
உதவித் தமிழ்ப் பண்டிதர்,
மதனப்பல்லி காலேஜ், மதனபல்லி.

(258-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் 3. களம் 4.

காலம்:—இரவு. இடம்:—கும்பாஜி ராணாவினரண்மனை. நாடகபாத்திரர்:—கும்பாஜி.

கும்—(தனக்குள்) எனின்னும் சுந்தரீ வரவில்லை? போய்த்திரும்ப நேரமாயிற்றே! ஒருவேளை யேதாவது பேசிக்கொண்டிருக்கிறளோ? அவளுயிரோடிருந்தாலல்லவோ பேசிக்கொண்டிருப்பாள்! அவள் தானிவ்வளவு நேரத்திற்குள் யமலோகம் போய்ச் சேர்ந்திருப்பாளே! நானனுப்பியிருக்கும் சர்ப்பங்கள் சாமான்யமானவைகளா? கடித்தாலுடனே மரணமென்பதற் கையமே யில்லை.—அப்பா, எனக்கினியொரு கஷ்டமுமிராது. அந்தப் பாபி தொலைந்த பிறகு எனக் கென்நாளும் சுகம்தான். ஆனல் சில சமயங்களிலென் மனதுக் கொருவிதமான வருத்தமுண்டாகிறது. அந்தப்புரத்துக்குப் போனல் முன்னிருந்த குதூகலமெனக்குண்டாகிறதில்லை. சில வேளைகளில் நானிப்படி மீராவை ஹிம்சிப்பது சரிதானே வென்கிற சந்தேகமென் மனத்திற்குள் ளுண்டாகிறது. ஆனல் அதற்கெல்லாம் நானிடங்கொடுப்பேனு? அதை யெல்லாம் கவனித்தாலென்னெண்ணமெப்படி நிறைவேறும்?

(சுந்தரி வருகிருள்.)

சுந்தரீ என்ன சமாசாரம்? காரியம் முடிந்ததல்லவா? என்ன ஒரு மாதிரியாயிருக்கிறயே. அதைக் கொண்டு போபவளுக்குக் கொடுத்தாயா, இல்லையா?

சுந்—தங்களுடைய வுத்தரவுப்படியே யதைக்கொண்டு போய்க் கொடுத்தேன்.

கும்—அவளதைத் தரித்துக் கொள்ளமாட்டேனென்றாளோ?

சுந்—தரித்துக் கொண்டாளே.

கும்—பின்னே.

சுந்—சர்ப்பங்கள் தானவளைக் கடிக்கவில்லை.

கும்—என்ன, என்ன, சர்ப்பங்களுயிருடனிருந்தனவோ?

சுந்—நன்றாய்ச் சீறிக்கொண்டவளுடைய சிரத்துக்குக் குடை பிடித்தன.

கும்—என்ன சுந்தரி, உண்மைதானா?

சுந்—நாதா, இதைவிட சத்தியம் இப்புவியிலிருக்க முடியாது.

கும்—அப்படியெவ்வளவு நேரமிருந்தன? சீக்கிரம் மாலையை யெடுத்துக் கீழே யெறிந்து விட்டாளோ?

சுந்—இல்லை. ஒரு முகூர்த்த காலம் வரையிலும் மாலையைக் கழுத்திலே தரித்திருந்தாள். அந்தச் சர்ப்பங்களும் அப்படியே குடை பிடித்துக் கொண்டிருந்தன. நானொளிந்திருந்து கூடப் பார்த்தேன். வெகுநேரம் கழித்து அவளம்மாலையிலிருக்கும் சர்ப்பங்களைத் தனியே யெடுத்து அவைகளுக்குப் பால் வார்த்தாள். அவைகளப்பாலைக் குடித்த பிறகு காட்டிற்குள்ளோடிப் போய்விட்டன.

கும்—(கோபத்தாற் பற்களைக் கடித்துக்கொண்டு இங்குமங்கு முலாவுகிறான்.)

சுந்தரி, நன்றாய்ப் பார்த்தாயா?

சுந்—நாதா, நான் சொல்வதிற்கூட உங்களுக்குச் சந்தேகமா?

கும்—(கொஞ்சம் பொறுத்து) சுந்தரீ, அவளிடத்திலே தோ மந்திர மிருக்கிறதென்பது நிச்சயம்.

சுந்—ஆமாம் நாதா, அப்படித் தானிருக்க வேண்டும். அன்றைய தினமவளுக்கு மகரகண்டிகையைக் கொடுத்த சந்யாசியொரு மந்திரவாதி யென்று கூடக் கேள்வி.

கும்— சரி, என் யூகத்தில் தவறேயில்லை. வெகு நாளாய்ப் பரிசய மிருந்திருக்க வேண்டுமிவர்களுக்கு.

சுந்—அதென்னவோ, ஒருவேளை யப்படி யிருந்தாலு மிருக்கலாம்.

கும்—இருக்கலாமாவது? அப்படித் தானிருக்கவேண்டும்.

சுந்—நானவ்வளவு நிச்சயமாய்ச் சொல்ல முடியாது.

கும்—உனக்கென்ன தெரியும்?

சுந்—(தனக்குள்) எனக்குத் தெரியுமா? நான் போதித்திருக்கிற போதனைக்குத் தெரியும்.

கும்—சுந்தரீ, இனியிவ்வித உபாயங்களால் பிரயோஜனமில்லை. எனக்கொரு நல்ல உபாயந் தோன்றுகிறது.

சுந்—என்ன நாதா?

கும்—சொல்லுகிறேன், வா. அதுவு முன்னலாகவேண்டிய காரியம் தான்.

(இருவரும் போகிறார்கள்)

(காட்சி முடிகிறது.)

ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர், யம். ஏ.

# மெய்ஞ்ஞானப் பால்.

(266-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

---

இந்த விசாரணை ஓரே முறை மாத்திரம் அல்ல, அனேக ஆயிரமுறை மறுபடியும் மறுபடியும் விசாரணை செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறு, நான் முன் கூறிய நிபுணர்கள், கூடினமட்டும் விசாரித்ததுமன்றி, நமதுமெய்ஞ்ஞான மாணாக்கரும் இவ்விஷயமாக மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதன் பலனாக, நமக்கு முன்பு சொன்ன நிபுணர்கள் ஆரம்பத்தில் தெரிவித்த விஷயங்களைச் சுபமாகவே பரிசோதனை செய்து அறிந்திருக்கிறதோடுகூட, அவைகளையே விசாலித்து, விவரப்படுத்திக் கூறவேண்டிய திறமையுடையவர்களாகவும் இருக்கின்றோம்.

நம்முடைய லோகத்திற்குச் சேர்ந்தும், சாதாரணமாக நம்முடைய காட்சி யறிவுக்குட்படாத இந்தப் பாகங்களை எல்லாம் இப்படி அறிவதனால், மிகவும் முக்கியமான அனேக நூதன விஷயங்கள் நமக்கு இப்போது தெரிந்திருக்கின்றன. ஆகையால் நாம் இப்போது சீவியத்தில் ஏற்படும் அனேக கடினமான காரியங்களை ஒருவாறு ஒழுங்குப்படுத்தச் சக்தியுள்ளவர்களாயிருக்கின்றோம். இதுவரைக்கும் நமக்கு மறைவான இரகசியங்களாக எண்ணிக்கொண்டிருந்தவைகள் அனேகம் இப்போது விவரமாக வெளிப்படையாகத் தோன்றுகின்றன. இவ்வாறு இருந்ததற்குக் காரணம் நாம் முயற்சி செய்து காரியங்களை விசாரிக்காமலும், விசாரித்தமட்டில் அவைகளை ஒரு போக்காகவே மேலிருந்துமாத்திரம் பார்த்து விசாரணை செய்ததன்றி, அவைகளுக்குள்ள பேதாபேதங்களையும், சம்பந்தாசம்பந்தங்களையும், அறியப் பிரயாசப்படாமல், வெவ்வேறானவையென்றும், சம்பந்தமற்றவையென்றும், அறிவீனமாக எண்ணியிருந்ததேயாம். ஆனால் இப்போது மேல் சென்று காரியங்களின் ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறியும் படியான நிலைமையில் இருக்

கிறபடியால், இதுவரைக்கும் நாம் பிரயோசனமில்லாமல் வியர்த்தமாகத் தர்க்கம்பண்ணிக் கொண்டிருந்த விஷயங் களைப்பற்றி ஒரு தீர்மானமான முடிவை அடைந்திருக்கின் றோம். இதற்குத் திருஷ்டாந்தமாக மனிதனுக்கு மரணத் திற்குப் பின் நேரிடும் தொடர்ச்சியுள்ள அனுபவங்களைப் பற்றிச் சில சங்கதிகளை யோசிக்கலாம். பற்பல மதஸ்தர் களும், இதுவரைக்கும் அனேக விதமாக, விபரீதமான நம பக்கூடாத சங்கதிகளைச் சொர்க்கத்தைப்பற்றியும், நரகத் தைப்பற்றியும், உத்தரிக்கும் ஸ்தலத்தைப் பற்றியும் எடுத் துரைக்கின்றனர். இவைகளைக் குறித்த உண்மையான அனுபவ சங்கதிகளை இப்போது அறிந்திருக்கிறதினால், அவைகளைப் பற்றிய மயக்கம் நீங்கிவிட்டது. அன்றியும் நியாயகதிற்குப் பொருத்தமான சிரமத்திற்குட் பட்ட முறைகள் நமக்குக் கிடைத்திருக்கிறபடியினால், இப்போது மரணத்திற்குப்பின் வரும் அனுபவங்களைக் குறித்து, உண் டாகும் பயமும் நீங்கிவிட்டது. ஆகையால் நாம் முன்னி ருந்ததைவிட இப்போது அதிக அனுபவ ஞானமுள்ளவர் களாயிருக்கின்றோம். இந்த நியாயமான அனுபவமுறையா தென்று இனி எடுத்துரைப்போம்.

(இன்னும் வரும்.)

வள்ளலூர் பரஞ்சோதியார்.

---

## நன்மொழி

---

வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம் பொருளே நின் விளையாட்டல் லால்
மாறுபடும் கருத்தில்லை. முடிவின் மோன
வாரிதியின் நதித்திரள் போல் வயங்கிற்றம்மா.

## “செய்ந் நன்றி யறிதல்.”

---

கடல்புடை சூழுமிக் காசினி யதனில்
உடல்சிறி தேனென உரைஎறும் பேழுதல்
பருத்ததோ ராகம் ஆமெனப் பகரும்
ஒருத்தல்ஈ றுக உள்ளவை யாவிலும்
பூர்த்தியாய் நன்னலம் யாவையும் பொருந்திய
சீர்த்திதான் மானிடர்க் கல்லவோ தெரிக்கில்?
அத்தகைச் சீர்த்தி அடைந்தது மானிடர்
எத்தகைத் தாலென இறைநோக் கிடுவம்
தொகுத்துச் சொல்லிடில் தோமறு சீர்த்தி
பகுத்தறி வதனி னன்றோ படைத்தனம்
இவ்வகை அறிவை எண்ணுறு நமக்கெலாம்
எவ்வகைக் கீந்தனன் இணையிலா இறைவன்
பேதையர் மயக்கிற் பிணையா கிடவோ?
மேதைக் கடங்கா வினைசெய் திடவோ?
பொருளே பொருளெனப் புந்தி மயக்கி
மருளே பொருளாம் வகைகொளு வதற்கோ?
தந்தைதாய் தனயர் தமரென ஆகும்
பந்தபா சத்திற் றழுந்தமா கிடவோ?
அல அல இவைக்கெலாம் அலஅவன் அளித்தனன்
புலமையிற் சான்றீர்! பூவிடை மானிடர்
ஆயுளுள் ளளவும் நல்நெறி ஆயவும்
வாய்மையிற் சற்றும் வழுவா துறவும
தன்னை உணர்ந்து தன்மய மாகவும்
உன்னி அன்றோ உதவினன் முதல்வன்
கருணையால் மானிடர்க் கருளுமிவ் வறிவை
இருள்நெறி செலுத்தி இடருறல் நன்றோ?
அற்ப உதவியும் ஆ! ஆ! மறந்திடில்
சொற்பமும் உய்விலை எனவே தோமிலாப்
பேருத வியைநாம் பிழைத்திடில் அந்தோ!
தீருத லென்றோ தேர்குவிர் நீரே

A. R. ஸ்ரீநிவாஸ முதலியார்,

செக்ரிடரி, நாராயணலாட்ஜ், ஆனைமலை.

---

குறிப்பு:—

வரி 4. ஒருத்தல்=யானை
8. இறை=சிறிது
14. வினை=தீவினை

# புத்தக வரவு

**பிரணவ வாதம்:**—இது ஓர் அரிய கிரந்தம். பிரஹ்மஸ்ரீ ஸர் யஸ். சுப்பிரமணிய ஐயரவர்களின் ஆங்கில முகவுரையுடன் இக்கிரந்தத்தின் முதற்பாகம் ஸமஸ்கிருதத்தில் பிரசுரமாகியிருக்கிறது. ஷை ஐயரவர்கள் "தியாசபிஸ்டு என்னும் ஆங்கிலப் பத்திரிகையில்" "சுத்த தர்ம மண்டலத்தைப்" பற்றி எழுதிய இரு வியாஸங்கள் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்று நமது பத்திரிகை வாயிலாக வெளி வந்ததைப் பலருமறிவர். நமது இந்தியா தேசத்தார்க்கென்று சிறப்பாய் அம்மண்டலத்தார் கருணைகூர்ந்து இப்போது பல சிஷ்யர்களைச் சேர்த்து, அவர்கட்கு ஆதிபிராசீனமான யோகமுறையையும், ஞானசாஸ்திரங்களையும் அருளி, அதன் மூலமாய் எப்படி தற்கால கதியில் விகஸித்துவரும் நாகரிகத்தையும் பயன்பெறச் செய்யலாமென்பதைக் காண்பித்து வருவதாகத் தெரிகிறது. தவிரவும் இப்புத்தகத்தின் சுருக்கமாகவும், எளிதில் ஸாரமாய் இதன் அர்த்தத்தை ஒருவாறு கிரஹிக்கும்படியாகவும், "பிரணவவாதார்த்த தீபிகை" என்ற ஒரு காரிகையும் (ஆங்கில மொழி பெயர்ப்புடன்) சேர்க்கப்பட்டுள்ளது. அந்த காரிகை ஸ்ரீஸ்வாமி யோகாநந்தரவர்களால் இயற்றப் பெற்றது. இவருக்கு இப்போது எண்பது வயதுக்கு மேலாவதாகத் தெரிகிறது. இவரை நமது தேசத்தில் புளியங்குடி ஜீயர் என்று சொல்வார்கள். இவர் சுத்த தர்ம மண்டலத்தைச் சேர்ந்த ஓர் ஸாது. சிரத்தையெடுத்துப் பிராசீன கிரந்தங்களைப் பிரசுரிக்க முன் வருவோர்க்கு, மஹா பாரதத்தைப்போல் எட்டு மடங்கு ஓர் அரிய பெரிய கிரந்தம் "பிரணவார்ணவம்" என்பதின் எட்டுப்பிரதியை சுத்த தர்ம மண்டலத்தாரின் ரஹஸ்யமான புஸ்தக சாலையினின்று சம்பாதித்துக்கொடுப்பதாக அருளுகிறார். மற்ற சர்மாணியர் அப்புத்தகசாலைக்கு அருகே போகமுடியாது. நமக்குள் தனிகராயிருப்பவர் இதற்குப் பொருளுதவி செய்தால் ஓர் மஹோபகாரமாகும். ஏனெனில் இப்போது நமக்குள்ள சுருதி. ஸ்மிருதி, பிரஹ்மசூத்திரம் முதலிய யாவும் சிறிதும் சிதிலமாகாமல், பழைய சுத்தமான நிலையிலேயே உள்ளன என்று உறுதிகொள்ளவும் முடியவில்லையென்பதற்குச் சில காரணங்களுள்ளன. ஸ்ரீமத்விவேகானந்தர் கூறியபடி ஸம்ஸ்கிருதப் படிப்பை, எல்லோருக்கும் இக்காலத்தில் படிப்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இக்கிரந்தத்

தின் விலை ரூ 3 தான். பிரஹ்மக்ஞான சபை அங்கத்தினர் வாங்கிப் படிப்பாராகில், நமது ஸபை மூலமாய் வெளிவந்த உண்மைகள் யாவும் அதிபிராசீன சாஸ்திரங்கட்கும் ஒத்தவையென் றறிந்து கொள்வார்கள். வேண்டுவோர் "பண்டிதர் கே. டீ. ஸ்ரீநிவாஸாசார்யர் 22, வெள்ளாளர் தெரு, புரசுவாக்கம் மதராஸ்" என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இதைப்பற்றி இன்னும் விரிவாகப் பின் வெளிப்படுத்துவோம்.

---

**ஓர் ஸம்பாஷணை:—** இது ரிடையர்ட் தாசில்தார் பிரஹ்மஸ்ரீ கே. யஸ். ராமசந்திர ஐயரவர்களால் வெளியிடப்பட்டது, இது நமது பூர்ணசந்திரோதயத்தில் வெளிவரவில்லை. விவேகோதயப் பத்திரிகையினின் று மறு பதிப்பாயிருக்கிறது. "தியானக்கிரம விஷயம்" என்னும் புத்தகத்தின் மூலமாய் இவரது நன் முயற்சியை யறிந்த எவருக்கும் இதன் அருமை சிறிது புலப்படும். ஸர்வசமயத்தைப்பற்றியும், பகவான் ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றியும், இது ஓர் சம்பாஷணை. இதிற் கூறப்பட்டுள்ள முறைப்படி ஒவ்வொரு ஹிந்துவும் இக்காலத்தில் பேசி வியவகரிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். இப்புத்தகம் வேண்டுவோர் மதுரை பிரஹ்மக்ஞான மந்திரத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## சமாசாரம்.

---

இந்த பிரஹ்மக்ஞான மந்திரத்தின் அங்கத்தினராகிய Mr. K. S. இராமச்சந்திர ஐயர் புதுக்கோட்டை இலாகா ஆலங்குடியில் உழைத்து வருவதைப்பற்றி முன் அக்டோபர் மாசத்திய சஞ்சிகையில் பத்திரிகையின் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவர்போன மேல் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை தினம் மத்தியானம் சிலர் சேர்ந்து பகவத்கீதை வாசித்துவர ஏற்பாடாகி நடந்து வருவதாகக் கேள்விப்பட ஆனந்திக்கிறோம். இந்த ஆலங்குடி சப்ரிஜிஸ்திராரும் ஸம்ஸ்கிருத பாஷையில் பண்டிதருமான மகா-ா-ா-ஸ்ரீ ராமபத்திர சாஸ்திரிகள் தெளிவாய் அர்த்தம் சொல்லிவந்தார். அவர் இப்போது ரஜாவின்மேல் போயிருக்கிறார். இப்போது, ஆலங்குடித் தாலூகா எட் அக்கவுண்டாண்டும் தமிழ் ஸம்ஸ்கிருதம் இங்கிலீஷ் இந்தப் பாஷைகளில் நன்குத் தேர்ந்தவருமான பிரஹ்மஸ்ரீ ஜி. சுப்பையா அய்யர் அவர்கள் அர்த்தம் சொல்லி வருகிறார்கள்.

இப்பொழுதும் ஆலங்குடி சர்க்கார் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிராமணப் பிரஹ்மச்சாரி பையன்கள் சரியானபடி சந்தியாவந்தனம் செய்கிறார்களில்லையென்று தெரிந்து அவர்களைக் காலையில் கூட்டி வைத்துக்கொண்டு சந்தியாவந்தனம் சொல்லிக் கொடுத்து வருவதாகவும் கேட்டு சந்தோஷிக்கிறோம். ஷை பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயரும் பரோபகாரச் சிந்தனை உள்ளவருமான மகா-ள-ள-ஸ்ரீ கே. வெங்கிட்டராம ஐயர் அவர்களும் இது விஷயத்தில் சிரத்தை எடுத்து ஷையாருக்கு வேண்டிய உதவி செய்து வருவதாகவும் தெரிந்து குதூஹலிக்கிறோம்.

இதனால் பரோபகார சிந்தனை யுள்ளவர் எங்கிருந்தாலும் அவரால் இயன்றமட்டும் அந்த இடத்திலுள்ளவர்களுக் கேற்றவிதமாய் உதவி புரியக் கூடுமென்பது பரிஷ்காரமாய் ஏற்படுகிறது.

இதைப் படித்தவர் ஒவ்வொருவரும் தன்னால் இயன்றமட்டும் பரோபகாரார்த்தமாக கைங்கரியம் செய்துவர வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

உதய நக்ஷத்திர சங்கம் ஒன்றை ஏற்படுத்தி நடத்தி வருவதாகவும் தெரிகிறது. இதில் இப்பொழுது 60 பெயர்கள்வரை மெம்பர்களாக இருப்பதாகக்கேட்க திருப்திகரமா யிருக்கிறது. அதற்கு பிரஹ்மஸ்ரீ K. S. இராமச்சந்திரய்யரவர்கள் பிரசிடெண்டாகவும், சர்க்கார் பள்ளிக்கூடம் III-ஆவது பாரத்தில் படிக்கிற ராஜாராம் என்ற பையன் காரியதரிசி யென்றும் தெரிகிறது.

# சர்வதேள் விஷ சஞ்சீவி.

## கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

குணமில்லாவிட்டால்

## ரூபாய் 100 இனும் கோடுக்கப்படும்!!!



நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனேகரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம். இது அனேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனேயன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய் பூரான், செய்யான், பாம்பு, நண்டு, துறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள், இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால்; அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அனேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | ரூ அ பை |
|---|---|
| விலை பாக்கெட் 1-க்கு ரூ | 0—8—0 |
| டசன் 1-க்கு ரூ | 5—0—0 |

விலாசம்:—வி. எ. எஸ். பாணி,

நே. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

# இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்தியசாலை எது?

1881-ஸால் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

# ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்.

**சஞ்சீவி பாலமித்ர.**

300 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1.

வியாதியைப்பற்றி விபரமாய் தெரிவிப்போருக்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடைகொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்.

## இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

## முதன்மையான

மருந்து சென்ற 35-ஸால் காலமாய் உபயோகிப்போருக்கு அற்புதகுணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள் 32. மாத்திரையின் விலை ரூ. 1.

வைத்திய சாஸ்திரி
**மணிசங்கர் கோவிந்தஜீ,**
ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,
157. பிராட்வே, மதராஸ்.
96. மவுண்ட்ரோட், மதராஸ்.

இருமல், கபம், காசம் இவைகளுக்கு சிறந்த மருந்து.

**காசாந்தக**

மாத்திரைகள் டப்பி 1-க்கு விலை ரூ. 1.

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறோம்.

77. மேலகோபுரம், மதுரை.